விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 28 செவ்வாய்க்கிழமை (11.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 143

## கொரோனா விதிகளை மீறி குருந்தூர்மலையில் விகாரை புனருத்தாபனம் இன்று ஆரம்பம்

### இராணுவத்தின் ஏற்பாட்டில் பிரித் ஓதல் நிகழ்வும் இடம்பெறுகின்றது

(பனிக்கன்குளம்)

கொரோனா விதிகளை மீறி குருந்தூர்மலையில் விகாரை புனருத்தாபனம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நேற்று இரவோடிரவாக பிரித் ஓதல் நிகழ்வும் இடம்பெற்றது.

அகழ்வாராய்ச்சி நடைபெற்று வரும் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை பகுதியில் கோவிட் - 19 விதிமுறைகளை மீறி முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்தின் ஏற்பாட்டில் நூற்றுக் கணக்கான இராணு 19

ஊழியருக்கு தொற்று

## பருத்தித்துறை நகர சபை மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை நகர சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு 19

### உடன் அமுலுக்கு வரும் வகையில்

# மாகாணங்களுக்கிடையில் பயணிக்கத் தடை

### 30ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் ஜனாதிபதி கோட்டா அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

துரிதமாக அதிகரித்து வரும் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிரடியாக அறிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

பணியாளருக்கு தொற்று

## நெல்லியடியில் வெதுப்பகம் ஒன்றுக்கு சீல்

(கரணவாய்)

நெல்லியடி நகரில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றில் பணிபுரியும் ஒருவருக்கு கொரோனா 19

## +2,573

(கொழும்பு)

இலங்கையில் மேலும் +2,573 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட 19

விமான நிலையங்கள்

## தொடர்ந்து இயங்கும்

(கொழும்பு)

விமான நிலையங்களை மூடுவதற்கு இது வரை எந்த முடிவும் 19

கிளிநொச்சியில்

## 14 பொலிஸாருக்கு கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் மேலும் 14 பொலிஸாருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 19

## யாழ். மாவட்டச் செயலக இரு கிளைகள் மூடப்பட்டன

### 22 பேர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபனிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதனால் மாவட்டச் செயலக இரு கிளைகள் இழுத்து மூடப்பட்டதோடு 22 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரி 19

வடமராட்சி குடவத்தையில்

## பிறந்தநாள் நிகழ்வு ஏற்பாடு செய்த பெண் கைது

(கரணவாய்)

வடமராட்சி குடவத்தை பகுதியில் அனுமதியின்றி பிறந்தநாள் நிகழ்வை ஏற்பாடு செய்த பெண் ஒருவரை நெல்லியடி பொலிஸார் நேற்று 19

## 36 பேருக்கு யாழில் கொரோனா

### ஒருவர் உயிரிழப்பு

- யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எழுமாற்றுப் பரிசோதனையில் 4 பேருக்கு தொற்று.
- இரு சிறுமிகள் உட்பட 3 சிறார்களுக்கு கொரோனா.

யாழ்.மாவட்டத்தில் 36 பேர் உட்பட வடக்கில் 37 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டிருப்பதாக மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் 19

கிளிநொச்சியில்

## 6 மாணவர்கள் பேருக்கு தொற்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் ஆறு மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு 19

## அலுவலகத்தில் முகக் கவசம் அணிந்து கொண்டு பணியாற்றுங்கள்

அஜித் ரோஹண

5ஆம் பக்கம் பார்க்க

## யாழில் இயங்கும் ஆதார வைத்தியசாலைகளில்

### ஒரு விடுதி கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள நான்கு ஆதார வைத்தியசாலைகளில் ஒரு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மீண்டும் அதே இடத்தில் சங்குப்பிட்டி பிள்ளையார்



(யாழ்ப்பாணம்)

உருத்திரசேனை அமைப்பால் சங்குப்பிட்டியில் கடந்த மாசி மாதம் மீள்பிரதிஷ்டை செய்யப்பட்டு சில நாட்களிலேயே காணாமல் ஆக்கப்பட்ட தொன்மை வரலாற்றையுடைய சங்குப்பிட்டி பிள்ளையார் சிலை மீண்டும் அதே இடத்தில் கிட்டத்தட்ட 10 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பிள்ளையார் சிலை நேற்று அதிகாலையிலேயே அங்கு காணப்பட்டதாக அவ்வழியால் பயணித்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று மதியம் அளவில் உருத்திரசேனை அமைப்பால் குறித்த பிள்ளையாருக்கு பாலாபிஷேகம் செய்யப்பட்டு, மலர் மாலைகள் சாத்தப்பட்டு, பட்டு வஸ்திரமும் சாத்தப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

(ம-03)

# சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையை கேட்காவிடின்

## நாடு பாரிய ஆபத்திற்கு முகம் கொடுக்கும் - ரணில்



(கொழும்பு)

மருத்துவ மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்காவிட்டால் நாடு பாரிய ஆபத்திற்கு முகம் கொடுக்கும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொரோனா நிலைமை மோசமடைந்து வருகிறது என்றும் தடுப்பூசிகள், ஒக்ஸிஜன், வென்டிலேட்டர்கள் மற்றும் வைத்தியசாலைகளில் படுக்கைகள் பற்றாக்குறை உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜூன் அல்லது ஜூலை மாதங்களுக்குள் 100 க்கும் மேற்பட்ட நாளாந்த இறப்புக்கள் பதிவாகலாம் என்ற தரவுகளை சேகரிக்கும் நிறுவனத்தை மேற்கோளிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு எதிரான போராட்டம் அரசியல் அல்ல என்றும் அரசாங்கத்தை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டதல்ல என்றும் சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க மக்களின் உயிரைப் பாதுகாப்பதாகும் என்றும் கூறினார்.

எனவே தற்போது கொரோனா பரவலுக்கு எதிராக செயற்படாமல் விட்டால் பல உயிர்களை இழக்க வேண்டி ஏற்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்தார். (ம-03)


கண்ணீர் அஞ்சலி



வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின்
தாபனக்கிளையில் பிரதம முகாமைத்துவ சேவை
உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி சிவலெட்சுமி ஜெயக்குமார்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர்**
**சண்முகம் ஏகாம்பரம்**
அவர்கள் நேற்று (10.05.2021) திங்கட்கிழமை காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 03.09.1939 | மறைவு 10.05.2021

(C-2139)

பிரிவுத் துயருடன்...
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



வெற்றுப் பரல் விற்பனைக்கு

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் வெற்றுப் பரல் விற்பனைக்குண்டு.
தேவைப்படுவோர் 15.05.2021 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

(C-2138)

தொடர்பு இல
021 222 2143



மரண அறிவித்தல்



பிறப்பு 08 – 12 – 1953

இறப்பு 10 – 05 – 2021

**சண்முகம் சந்திரசூரியர்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சந்திரசூரியர் நேற்று ( 10.05.2021 ) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் தியாகராஜா - காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாதேவியின் அன்புக் கணவரும் மீரா, வினோத், மதுரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மல், சிவானி, சயிதன் ஆகியோரின் மாமனாரும் ரவீந்தினி, லலிதா, விமலா, சுமதி, ரூபி ஆகியோரின் மைத்துனனும் மயூராமாயா, ஆரியன், அஜன், ஆதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2140)

சித்தன்கேணி சந்தி,
யாழ்ப்பாணம்.
021 225 0028 (மனைவி)
தகவல்:- [illegible]



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 03 . 04 . 1931



இறைவன் அடியில் 22 . 04 . 2020

அமரர்
**திருமதி செல்லம்மா நடராஜா**

காலம் எல்லாம் எம்மைச் சுமந்து வாழவைத்தீர்
நோய் என்று படுக்கவில்லை, ஒரு நொடியும் ஓய்வதுமில்லை
விண்ணூடு சென்றிருந்தாலும் உம் அன்புக்கு விலை பேசமுடியாது.
கண்ணின் மணிபோல் மனதில் நிறைந்தவர் மறைந்தால்
எமக்காக உரிமையுடன் யார் இனி ஆறுதல் சொல்வது?
அன்புத் தாயே!
நயம்பட சிரித்துச் சிரித்து எல்லோருடனும் உறவாடிய
நாளெல்லாம் கழிந்த நினைவுகள்
நித்தமும் ஆயிரம் நிழலாடுகிறது
தாங்க முடியவில்லையே...

(6865)

உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சித்தியைக் கொடுக்கும் குரும்பசிட்டி சித்தி விநாயகரும், முத்தான முத்துமாரி அம்மனும், முதலியார் வைரவர் துணையுடனும், ஐயப்பன் அருள் வேண்டி அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

, உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர், ஐயப்ப பக்தர்கள் மற்றும் நண்பர்கள்.
சுலோ : 61 438 764 307 / ராணி : 61 414 191 011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாத அரசிற்கு அடிபணிந்து இனத்தின் பிரதிநிதித்துவத்தை விட்டுக்கொடுக்கமாட்டோம்

(கொழும்பு)

**இன்றைய விகிதாசார தேர்தல் முறைமை மாற்றப்பட்டால் சிதறி வாழும் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது முகநூலில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு,**



"வடக்கு- கிழக்குக்கு வெளியே 50 விகித தமிழரும், 65 விகித முஸ்லிம்களும், தென்னிலங்கை மாவட்டங்களில் சிதறி வாழ்கிறார்கள். இன்றைய விகிதாசார தேர்தல் முறைமை மாற்றப்பட்டால், இந்த மக்களின் பிரதிநிதித்துவங்கள் சரிபாதிக்கு மேல் மாகாண சபைகளிலும் பாராளுமன்றத்திலும் குறைந்துவிடும்.

அதேபோல், அம்பாறையில் தமிழரும், மட்டக்களப்பில் முஸ்லிம்களும் வெற்றிபெறுவதுகூட கடினமாகிவிடும். திருகோணமலையிலும் வன்னியிலும் கூட இன்றுள்ள ஒழுங்கு மாறும்.

பெரும்பான்மை கட்சிகள் ஒருபோதும் நேர்மையாக நடக்காது. ஆகவே, பெரும்பான்மை கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு அவர்களுக்கு சிதறிக் கிடக்கும் தமிழ், முஸ்லிம் வாக்குகளை வாங்கி கொடுத்துவிட்டு, பிறகு பட்டியலில் நியமனம் கிடைக்கும் என எதிர்பார்ப்பது இலவுகாத்த கிளியின் கதையாகி விடும். ஒருபோதும் பெரும்பான்மை கட்சிகளும் பெரும்பான்மை அதிகார வர்க்கமும் தனித்தமிழ் தொகுதிகளை நுவரெலியா மாவட்டத்துக்கு வெளியே உருவாக்க உடன்படாது.

இன்றைய முறையில், இன்று கடைசியாக மாகாணசபைகளில், பாராளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை குறைந்தபட்ச அளவுகோலாக கொண்டு அவற்றை உறுதிப்படுத்த, மாற்று யோசனையை தரும்படி பெரும்பான்மை கட்சிகளை நாம் கூட்டாக எழுத்து மூலம் கோர வேண்டும்.

பட்டியல் நியமனங்களை ஒருபோதும் கணக்கில் எடுக்க முடியாது என்பதையும் அறிவிக்க வேண்டும்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நியாயமான முறைமை முன்வைக்க முடியாவிட்டால், இன்றைய அதே விகிதாசார முறைமையை அடிப்படையாகக் கொண்டு, இன்றைய தேர்தல்மாவட்டங்களை சனத்தொகைக்கு ஏற்ப இரண்டு, மூன்றாக பிரிக்கும், "வலய தேர்தல் முறைமை" யை நாம் மாற்று யோசனையாக முன்வைக்க வேண்டும். இது புதிதல்ல. ஏற்கனவே, நமது அரசியலமைப்பில் 14 ஆம் திருத்தமாக கொண்டுவந்து விட்டு நடைமுறைப்படுத்தாமல் விடப்பட்டதாகும். இது எமது அரசியல் இருப்பு தொடர்பான பிரச்சினை. தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான பிரதிநிதித்துவங்களை ஒழிக்க ஒருதலைப்பட்சமாக பெரும்பான்மை அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் அது உச்சக்கட்ட பேரினவாதம்.

பேரினவாதத்துக்கு அடிபணிந்து, எமது இன்த்தின் பிரதிநிதித்துவங்களை விட்டுக் கொடுத்துவிட்டோம் என்ற எதிர்காலத்தின் பழிச்சொல்லுக்கு நாம் ஆளாகக் கூடாது.

அடாவடியான தேர்தல்முறை மாற்றத்துக்கு எதிராக போராட்டங்களை நாம் முன்னெடுக்க, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி பேதங்களை களைந்து விட்டு, தமிழ் பேசும்அரசியல்வாதிகள்முன்வர வேண்டும் என மனோ கணேசன் பதிவிட்டுள்ளார். (நி-4)

# முன் பதிவுகளுடன் கொன்சியூலர் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிராந்திய கொன்சியூலர் விவகாரப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகளைப் பெறுவதற்கு முன்பதிவு செய்து கொள்வதன் மூலம் மேற்கொள்ள முடியும்

அந்த வகையில் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்கு வருகை தருவதற்கு முன்னர் +94 021 221 5972 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு, முன் நியமனத்திற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், குறித்த முன் நியமனங்களை வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் 4.15 மணி வரை மட்டுமே மேற்கொள்ள முடியும் என யாழ்.பிராந்திய கொன்சியூலர் அலுவலக உதவிப்பணிப்பாளர் பி.யசோதரா அறிவித்துள்ளார்.

மேலும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் இறப்பு, இழப்பீடு, மீள அழைத்து வருதல் மற்றும் இதர விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளுக்கு +94 021 2215972 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும், +94 0212215970 எனும் தொலைநகல் இலக்கத்தினூடாகவும் jaffna.consular@mfa.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவும் தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-5-6-33)

# நாடு முடக்கப்படாது மட்டுப்படுத்தப்படும்

(கொழும்பு)

கொவிட் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முழு நாட்டையும் முடக்கும் தீர்மானம் கிடையாது என தெரிவித்த கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தேவை ஏற்படின் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தினை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (நி-4)

# துறைசார் பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடத்தப்படவிருந்த துறைசார் நிறுவனப் பரீட்சைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பை பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

# சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு விசேட சலுகைக்காலம்



(கொழும்பு)

சாரதி அனுமதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் எதிர்வரும் செப்டெம்பர் 30 ஆம் வரையான காலப்பகுதிக்கு காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இக்காலப்பகுதியில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களை அவை காலாவதியான திகதியிலிருந்து மேலும் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

# கல்வியமைச்சில் ஆறு பிரிவுகளுக்குப் பூட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றின் வேகம் அதிகரித்துள்ளமையால், கல்வியமைச்சில் பாடசாலை நடவடிக்கைகள் பிரிவு உள்ளிட்ட ஆறு பிரிவுகள் மூடப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் தொற்றாளர்களுடன் நெருங்கிப்பழகியவர்கள் இனங்காணப்பட்டமையால் இந்த ஆறு பிரிவுகளும் மூடப்பட்டுள்ளன என கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கல்வியமைச்சின் செயற்பாடுகளை, கொரோனா பரவலுக்கு மத்தியிலும் ஆகக்கூடுதலாக செயற்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு கல்வியமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில் விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (நி-4)

# மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

(கொழும்பு)

நாரஹேன்பிட்டி மற்றும் வெரஹெரவில் அமைந்துள்ள இலங்கை மோட்டார் போக்குவரத்துத் துறையின் அலுவலகங்கள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

தொலைபேசி மூலமான நியமனங்கள் முன்பதிவு உள்ளிட்ட அனைத்து சேவைகளும் மேலதிக அறிவிப்பு வரும் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுமித் அழகக்கோன் தெரிவித்தார்.

அதேநேரம் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களினால் வழங்கப்படும் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் துறையின் மாவட்ட அலுவலகங்களில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான எழுத்துபூர்வ மற்றும் நடைமுறை சோதனைகளும் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணி





இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்த சீசனின் பிற்பகுதியில் மூன்று ஒருநாள் மற்றும் ஐந்து இருபது-20 போட்டிகள் கொண்ட தொடருக்காக இந்திய கிரிக்கெட் அணி இலங்கைக்கு பயணிக்கும் என்று பி.சி.சி.ஐ. தலைவர் சவுரவ் கங்குலி நேற்று முன்தினம் உறுதிபடுத்தியுள்ளார்.

எனினும் தலைவர் விராட் கோலி மற்றும் துணைத் தலைவர் ரோஹித் சர்மா ஆகியோர் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இல்லாமல் இரண்டாம் தர இந்திய அணியே இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இங்கிலாந்து அணியுடன் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணியின் முன்னணி வீரர்கள் இலங்கையுடனான சுற்றுப் பயணத்திலிருந்து விலகியுள்ளனர். (4-6)

# பார்முலா 1 கார்ப்பந்தயத்தில் ஹாமில்டன் முதலிடம்




இந்த ஆண்டுக்கான பார்முலா 1 கார்ப்பந்தயம் உலகம் முழுவதும் 23 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 4 ஆவது சுற்றான ஸ்பெயின் கிராண்ட் பிரி பார்சிலோனாவில் நேற்று முன்தினம் நடந்தது. 308.424 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி வழக்கம் போல் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில் தகுதிச் சுற்றில் முதலிடம் பிடித்த 7 முறை சம்பியனான இங்கிலாந்தின் லீவிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ் அணி) எதிர் பார்த்தது போலவே முதனாவதாக வந்து 25 புள்ளிகளை தட்டிச் சென்றார். அவர் பந்தய தூரத்தை 1 மணி 33 நிமிடங்கள் 07. 680 விநாடிகளில் எட்டி வெற்றி கண்டார். அவரை விட 15.841 விநாடி பின்தங்கிய நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப் பென் (ரெட் புல் அணி) 2 ஆவதாக வந்து 19 புள்ளிகளை பெற்றார். பின்லாந்து வீரர் வால்டெரி போட்டாஸ் (மெர் சிடஸ்) 3 ஆவது இடத்தை பிடித்தார்.

இந்த சீசனில் 3ஆவது வெற்றியை ருசித்த ஹாமில்டன் சம்பியன்ஷிப் வாய்ப்பில் மொத்தம் 94 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். வெர்ஸ்டப்பென் 80 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் இருக்கிறார். 5 ஆவது சுற்றுப் போட்டி எதிர் வரும் 23 ஆம் திகதி மொனாக் கோவில் நடக்க இருக்கின்றது. (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மாட்ரிட் ஓபன் டென்னிஸ் சபலென்கா சம்பியன்



ஸ்பெயினில் நடந்த மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியில் 'நம்பர் வன்' வீராங்கனை ஆஷ்லி பார்ட்டிக்கு அதிர்ச்சி அளித்து சபலென்கா சம்பியன் பட்டத்தை சொந்தமாக்கினார்.


மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்தது. களிமண் தரை போட்டியான இதில் அரங்கேறிய பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் 'நம்பர் வன்' வீராங்கனை அவுஸ்திரேலியாவின் ஆஷ்லிபார்ட்டியும், 7 ஆம் நிலை வீராங்கனை அரினா சபலென்காவும் (பெலாரஸ்) மோதினர்.

இதில் தொடக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய சபலென்கா, முதல் செட்டில் ஒரு கேமை கூட (6-0) இழக்காமல் அசத்தினார். ஒரு செட்டில் ஆஷ்லி பார்ட்டி ஒரு கேம் கூட வெல்லாதது கடந்த 4 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். இதன் பின்னர் 2 ஆவ்து செட்டை கைப்பற்றி மீண்ட ஆஷ்லி, கடைசி செட்டில் சபலென்காவின் ஆக்ரோஷத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பணிந்தார்.

ஒரு மணி 39 நிமிடங்கள் நடந்த ஆட்டத்தின் முடிவில் சபலென்கா 6-0, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் வாகை சூடி பட்டத்தை வசப்படுத்தினார்.

இது சபலென்காவுக்கு 10 ஆவது சர்வதேச பட்டமாகும். அதேசமயம் களிமண் தரை போட்டியில் அவருக்கு இது முதல் மகுடமாகும். அவருக்கு ரூ.2 கோடியே 81 இலட்சம் பரிசுத்தொகையும் ஆயிரம் தரவரிசை புள்ளிகளும் கிடைத்தன. (4-6)

# யூனிஸ்கானின் சாதனையை முறியடித்தார் அபித் அலி




சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டி தொடரில் விளையாடி வருகின்றது.

2 ஆவது டெஸ்ட் போட்டியில் 2 ஆவது நாளில் பாகிஸ்தான் வீரர் அபித் அலி புதிய சாதனை படைத்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் முதன் முறையாக இரட்டை சதம் (215) அடித்த அவர், சிம்பாவே நாட்டில் அதிக ரன்களைச் சேர்த்த பாகிஸ்தானிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான யூனிஸ் கான் ஆட்டமிழக்காமல் 200 ரன்களை குவித்தது சாதனையாக இருந்தது. அதனை 8 ஆண்டுகள் கழித்து அபித் அலி முறியடித்துள்ளார்.

கடந்த 1998 ஆம் ஆண்டு முகமது வாசிம், ஹராரேவில் 192 ரன்களை எடுத்ததே அதற்கு முன், அதிகபட்ச ஸ்கோராக இருந்தது. (4-6)

# தடுப்பூசி போட்டார் விராட் கோலி



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட்கோலி, நேற்று கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்.

கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்ட புகைப் படத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ள விராட் கோலி, அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள முன்வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஐ.பி.எல்.தொடர் பாதியிலேயே நிறுத்தப்பட்ட பிறகு, வீடு திரும்பிய விராட் கோலி தனது மனைவி அனுஷ்கா சர்மாவுடன் இணைந்து விராட் கோலி கொரோனா நிவாரண நிதி ரூ. 2 கோடியை நன்கொடையாக வழங்கினர்.

மற்றவர்களையும் கொரோனா நிவாரண பணிகளுக்கு நிதி வழங்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியிடங்களில் முகக்கவசம் அணிந்து பணியாற்றுங்கள் - அஜித் ரோஹண

(கொழும்பு)

**அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்தவாறு பணியாற்றுவதை நிறுவனங்களின் பிரதானிகள் உறுதிப்படுத்த வேண்டும் என பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது.**



நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் ஒன்றாக இணைந்து உணவு உண்ண வேண்டாம் என பொலிஸ் தலைமையகம் அனைத்து ஊழியர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

உணவு மற்றும் பானங்களை அருந்தும் போது முகக்கவசத்தை கழற்ற வேண்டும். அதனால் பலர் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் போது, கொவிட்-19 வைரஸ் பரவலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அல்லது அலுவலகங்களில் பணிபுரிவோர் தமது பணியிடங்களில் முகக்கவசம் அணிதல், இடைவெளியைப் பேணுதல் என்பன கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

இதனைத் தவிர பணியிடங்களில் இருப்போரின் உடல் உஷ்ணத்தை பரிசோதிக்க தேவையான வசதிகளை நிறுவனங்களின் பிரதானிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# தெருக்களில் மக்கள் இறப்பதை மட்டுமே இலங்கையில் காணமுடியவில்லை

## முடக்குமாறு வலியுறுத்துகிறார் மனோ

(கொழும்பு)

போர்ட் சிட்டி பொருளாதார ஆணைய யோசனை மீதான விவாதத்தை ஒத்திவைத்து, முழுமையான முடக்கலுக்கு செல்லுமாறு பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் அரசாங்கம் நிறுத்தி கொவிட் தொற்றுநோயை கட்டுப்படுத்த நிதியைத் திருப்பி விட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

அரசாங்கம் முடக்கலுக்கு சென்று கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த முன்னுரிமை அளிக்க வேண்டும்.

துறைமுக நகர பொருளாதார ஆணைய யோசனைக்கு பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதை பின்னர் மேற்கொள்ளலாம்.

அரசாங்கம் நாட்டு மக்களை மோசமான தொற்றுநோயிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

இந்தியாவுடன் ஒப்பிடும் போது இலங்கையில் தொற்று நோய்கள் தொடர்பில் ஒரு வித்தியாசத்தைக் காணமுடிகிறது.

பொதுமக்கள் வீதிகளில் விழுந்து இறப்பதை மட்டுமே இலங்கையில் காண முடியவில்லை என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வோஷிங்டன் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வை மேற்கோள்காட்டி இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தாவிட்டால் ஏற்படும் விளைவை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நாடு முழுவதும் முடக்கலை மேற்கொண்டு ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் வாரந்தோறும் 5,000 ரூபாய் வருமானத்தை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# ஊருக்குத் தான் உபதேசமோ?



(கொழும்பு)

கொரோனா தொற்றின் மூன்றாவது அலை தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது.

சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுமாறு அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் அவற்றை கடைப்பிடிப்பதில்லை.

முகக்கவசம் அணியாத பொது மக்களை, பொலிஸார் அப்படியே தூக்கிச் செல்லும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

யாழ்ப்பாணம், மன்னார், பண்டாரவளை மற்றும் மட்டக்களப்பில் பொதுமக்களை இவ்வாறு, பொலிஸார் தூக்கிச் சென்றிருந்தனர்.

அதேபோல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, முக்கிய கூட்டமொன்றில், முகக்கவசம் அணியாது அமர்ந்திருக்கின்றார். இந்த கூட்டம் நேற்று இடம்பெற்றுள்ளது. இந்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. அவரை ஏன் பொலிஸார் தூக்கிச் செல்லவில்லை என்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாக கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. (நி-4)

# சொத்துக்காக தந்தையை கொலை செய்த மகன்

(கொழும்பு)

வெயாங்கொட பகுதியில்தனது 67 வயதுடைய தந்தையை கொலை செய்ததாக சந்தேகத்தில் மகன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதுடைய மகன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது சகோதரன் தள்ளிவிட்டதில் தந்தை உயிரிழந்ததாக உயிரிழந்தவரின் மகள் செய்த முறைப்பாட்டிற்கு அமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை வீட்டிற்கு வந்த குறித்த மகன் தன்னுடைய சகோதரிக்கு எவ்வித சொத்துக்களையும் வழங்க வேண்டாம் எனத் தெரிவித்து தந்தையை தள்ளிவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது காயங்களுக்கு உள்ளான தந்தை வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் பிள்ளைகளினால் பெற்றோர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் 4 பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-4)



யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று திங்கட்கிழமை பெய்த கடும் மழை காரணமாக வலிகாமம் பகுதியில் விவசாய நிலங்கள் பலவும் வெள்ளக் காடாக காட்சியளித்தன.

(படங்கள்: ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.ஆர். முடிவுகள் தாமதமானால் தொற்றுக்கள் அதிகரிக்கும்

## நகர சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

**பி.சி.ஆர். முடிவுகளை இயன்றளவிற்கு துரிதப்படுத்தி வெளியிட்டு தொற்று வீதத்தினைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முயற்சிக்க வேண்டும் எனச் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ம.நடனதேவன் வலியுறுத்தியுள்ளார்.**

தென்மராட்சியின் கொரோனா நிலவரமும்- அதன் தீவிரத் தன்மை தொடர்பாகவும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தென்மராட்சியைப் பொறுத்தவரை பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்க ஐந்து நாட்களாகின்றன. இதனால் தொற்றாளர்கள் சமூகத்தில் நடமாடி ஏனையோருக்கும் தொற்றினைப் பரப்பும் நிலை காணப்படுகிறது.

குறிப்பாக தென்மராட்சியில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் என கிட்டத்தட்ட 400பேரிடம் பெறப்பட்டபி.சி.ஆர்.மாதிரிகளின் முடிவுகள் நேற்று மதியம் வரை கிடைக்கப் பெறவில்லை.

முடிவுகளை தாமதப்படுத்தி வெளிப்படுத்துவது நிலைமையை மேலும் மோசமாக்கும். யாழில் பி.சி.ஆர்.மாதிரிகளை பரிசோதிக்கும் ஆய்வு கூட மையங்களை அதிகரித்து காலையில் எடுக்கும் பி.சி.ஆர். மாதிரிகளின் முடிவை விரைவாக வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இதனால் தொற்றாளர்கள் சமூகத்தில் நடமாடுவதனை தடுத்து தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். தற்போது கொடிகாமம் சந்தை மற்றும் நகரம் ஆகியன பெருந்தொற்றின் காரணமாக முடக்கப்பட்டுள்ளன.

இதனால் கொடிகாமம் சந்தையை இதுவரை பயன்படுத்திய பலரும் அருகில் உள்ள சந்தையான சாவகச்சேரி பொதுச் சந்தையை நாடுகிறார்கள்.

இந்நிலையில் சாவகச்சேரி பொதுச் சந்தையிலும் வியாபாரிகள், வர்த்தகர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு தொற்று நிலவரத்தை அவதானித்து அதற்கேற்றவாறு பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். (5-8-30)




# தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது

(நல்லூர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா கொடும் நோய்த் தொற்றலின் பரம்பலைக் கருத்தில் கொண்டு சுகாதார அதிகாரிகளின் பணிப்புரைக்கமைய நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வளாகத்தினுள் ஆலய அறங்காவலர்கள், குருமார்கள் மற்றும் ஆலய பணியாளர்கள் தவிர்ந்த ஏனைய பொது மக்கள் எவரும் ஆலயத்தினுள் பிரவேசிக்க தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஆலயத்தில் இடம்பெற்று வந்த அபிஷேகங்கள் மற்றும் தினசரி அன்னதானம் என்பவையும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனவும் அறங்காவல்ர் சபை அறிவித்துள்ளது. (5-8-33)

# கறுப்புப் பட்டியலில் காட்சிப்படுத்த வேண்டாம்

(சாவகச்சேரி)

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற கொரோனா அச்ச நிலைமை காரணமாக உள்ளூராட்சி சபைகளிடம் சந்தை மற்றும் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு எடுத்தவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இதனால் சிலர் குத்தகையை முடிவுறுத்தும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அசாதாரண சூழ்நிலை காரணமாக தொடர்ந்தும் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் குத்தகையை முடிவுறுத்துபவர்களது பெயர்களை சபையின் கறுப்பு பட்டியலில் காட்சிப்படுத்தக்கூடாது என உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சிலர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-8-30)

# யோகா போட்டியில் உலக சாதனை

(யாழ்ப்பாணம்)

அகில உலக யோகா சம்மேளனம்அகில உலக யோகா போட்டியை கடந்த ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் இணைய வழியில் நடத்தியது.

இப்போட்டியில் யாழ். யோகா உலகம் அமைப்பு சார்பாக் கணேசமூர்த்தி ராஜ்குமார் இருவேறு யோகா போட்டிகளில் போட்டியிட்டு முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களை வென்று தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களைப் பெற்றுக் கொண்டார்.

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் வளையுந்தன்மையுடைய ஆசன பிரிவிலும் விசேட ஆசன பிரிவிலுமே இச்சாதனை படைக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினாவை தளமாகக் கொண்டியங்கும் யோகா சம்மேளனத்தின் யோகா நிகழ்வில் இலங்கை, இந்தியா, மலேசியா முதலான பல நாடுகள் பங்கு கொண்டன. இதன் முடிவுகள் இம் மாதம் 8 ஆம் திகதி வெளி யாகியிருந்தன.

அகில உலக யோகா போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டியமைக்காக யோகா சம்மேளனத்தின் ஆசிய இயக்குநர் இராதாகிருஷ்ணன் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். (5-6)

# சட்டவிரோத மணல் அகழ்வு டிப்பருடன் சாரதி கைது

(வரணி)

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வரணி மாசேரி கிராமத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்துடன் அதன் சாரதியையும் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த சில வருடங்களாக மாசேரி, இடைக்குறிச்சி போன்ற பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இந்த மணல் அகழ்வால் விவசாய நிலங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் பாதிப்படைகின்றன. இந்நிலையிலேயே நேற்று முன்தினம் இக்கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. (5-8-103)



இராணுவத்தின் 513 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை மல்லாகத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)



கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் சார்பாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கடந்த சனிக்கிழமை ஒரு தொகுதி முகக்கவசங்கள் மற்றும் தொற்று நீக்கிகள் வழங்கப்பட்டன. (படம்: [illegible])



முல்லை திவ்யனால் பொலிகண்டியைச் சேர்ந்த 50 சிறுவர்களுக்கு தேசி மரக்கன்றுகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கைது, தடுத்து வைப்பு தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

நாட்டில் கடந்த வருடம், கொரோனா தொற்று பரவல் ஆரம்பமானதை தொடர்ந்து இதுவரை சட்ட விரோதமாக கைது செய்யப்பட்டமை மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக அவ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொவிட் 19 பரவல் காலத்தின் இடையே, கைது நடவடிக்கையின் கீழ் உள்ள நபர்கள் மற்றும் கைது செய்யப்படும் சந்தேக நபர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு விசேட கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இதனை தெரிவித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஜகத் பாலசூரியவின் கையெழுத்துடன் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் கொவிட் 19 நிலைமையில், அவ்வாறான உரிமை மீறல்கள் நிகழாமல் பார்த்துக்கொள்ளுமாறும், கைது செய்யப்படும் அனைத்து சந்தேக நபர்கள் தொடர்பிலும் சட்ட வரையறைக்குட்பட்டு செயற்பட அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்குமாறும் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளது.

கொரோனா பரவல் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதன் ஊடாக, தடுப்புக் காவலின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள், தமது உறவினர்கள் மற்றும் சட்டத்தரணிகளை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் தற்காலிகமாக வழங்கப்படாமை காரணமாக அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் ஆகியன பாதிக்கப்பட்டுள்ளதாக பல்வேறு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தடுப்புக் காவலின் கீழ் உள்ள சந்தேக நபர்களின் நலன்கள் மற்றும் அவர்களது உறவினர்கள், சட்டத்தரணிகளுடன் தொடர்பாடலை முன்னெடுக்க முடியுமான வகையில் செயற்திறன் மிக்க நடவடிக்கை தொடர்பில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அறிவிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளது. (நி-4)

# அரசியல் காரணங்களுக்காகவே றிசாத் கைதானார்- சட்டத்தரணி

(கொழும்பு)

நீதிமன்றம் அல்லது சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்காமல் நிர்வாக மற்றும் அரசியல் காரணங்களுக்காக றிசாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு அவரைக் கைது செய்ய பரிந்துரைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# இலங்கைக்கு 500 மில்லியன் சலுகைக் கடன்

(கொழும்பு)

இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சலுகைக் கடனாக வழங்குவதற்கான உடன்படிக்கையில் கொரிய எக்ஸிம் வங்கி கைச்சாத்திட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

40 வருட மீள் செலுத்து கைக்கால அவகாச அடிப்படையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: திருவோணம்
கி.பா:90 செவ் 8 சூரி1 இல்
உயரம்:182cm
தகைமை/தொழில் A/L இத்தாலியில் PR உண்டு
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண். வெளிநாடும் பார்க்கலாம்.
தொ.இ: B/11889

பிறப்பு:1993 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 56செவ் 10 சூரி9 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி.தொழில் -உதவி முகாமையாளர்.
எதிர்பார்ப்பு:படித்தகுணமான பெண்
தொ.இ: B/11890

பிறப்பு:1986 இந்து நட்சத்திரம்:பூரட்டாதி
கி.பா:-செவ் 5 சூரி2 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: B.Ed.ஆசிரியர்
எதிர்பார்ப்பு:ஆசிரியர் விரும்பத்தக்கது.
தொ.இ: B/11893

பிறப்பு:1979 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 28 ½செவ் 3 சூரி 6இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L.லண்டன் வியாபாரம், PR உண்டு
எதிர்பார்ப்பு: சாதாரணபடித்த பெண். உள்நாடு மட்டும்
தொ.இ: B/11894

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 23 ½ செவ் 6சூரி 1 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:. BSc,SLAS. உதவி அரச அதிபர்
எதிர்பார்ப்பு:தகுந்த வரன் உள்நாடு மட்டும்
தொ.இ:G/4636

பிறப்பு:1988 இந்து நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: 44செவ் 8 சூரி 1 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:M.A.விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:அரசதொழில். குணமான ஆண். வெளிநாடும் பார்க்கலாம்
தொ.இ:G/4749

பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா:36 ½ செவ் 8சூரி 6 இல்
உயரம்:170cm
தகைமை/தொழில்:B.Sc,Work As Chemist
எதிர்பார்ப்பு: பட்டதாரி. விஞ்ஞானப்பிரிவு. பொறியிலாளர்.உள்நாடு.வெளிநாடு
தொ.இ:G/4751

பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்:சித்திரை
கி.பா:- செவ் 3 சூரி2 இல் உயரம்:5'1"
தகைமை/தொழில்: B.A. அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:யாழ்மாவட்டம் விரும்பத்தக்கது. அரசதொழில்.உள்நாடுமட்டும்.
தொ.இ:G/4753

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## 100ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

11.05.1921- 11.05.2021




### ஆறுமுகம் கனகசிங்கம்

பாரதத்தில் இருக்கும் எங்கள் அருமைத் தந்தையின் 100 ஆவது பிறந்த நாளில் இவ்வுலகில் நாங்கள் வாழும் காலம் மட்டும் உங்கள் ஆசிவேண்டி நிற்கிறோம்.

துர்க்கை அம்மன் கோயில்,
தெல்லிப்பழை

மனைவி,
பிள்ளைகள்.

(C-2135)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை புனரமைக்க ஒருங்கிணைப்புக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்



(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திற்கும் பூநகரியின் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதியினைப் புனரமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்க வேண்டும் என போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்கந்தபுரம் முக்கொம்பன் வீதி வயலின் ஊடாக அமைந்துள்ளது. இவ்வீதி ஒரு காலத்திலும் நிரந்தரமாக அமைக்கப்பட்டதில்லை. தற்காலிகமாக கிரவல் பரவப்பட்டு போக்குவரத்துகள் நடைபெற்ற போதிலும் தற்போது இவ்வீதி பெருங்குண்டும் குழியுமாக மாறி உள்ளது. குறித்த வீதியினை புனரமைப்பதற்கான ஒழுங்குகளை அமைச்சர் மேற்கொண்டுள்ளார் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு முன்னர் அறிவித்திருந்தது.

ஆனால் இதுவரை குறித்த வீதியினைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அக்கராயனில் இருந்து முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்திற்கு நடைபெறுகின்ற ஒரேயொரு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையும் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் நடைபெறுகிறது.

இப்பேருந்து சேவையும் நிறுத்தப்படுமானால் பல கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொள்வார்கள். ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் பக்கமாக ஒரு கிலோமீற்றர் வரையான வீதி கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டிருந்த போதும் தற்போது சேதமடைந்து காணப்படுகிறது.

குறித்த வீதியினை புனரமைப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்க வேண்டும் என போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (4-8-315-350)

# விபத்து; ஒருவர் படுகாயம் நான்கு வாகனங்கள் சேதம்



(முறிகண்டி)

முறிகண்டி பகுதியில் நேற்று இடம்பெற்ற பாரிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். குறித்த விபத்து நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள இராணுவ சோதனைச் சாவடியில் தரித்து நின்ற வாகனத்துடன் கார் மோதியதில் விபத்து ஏற்பட்டது. இதே வேளை நான்கு வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சோதனைச்சாவடியில் தரித்து நின்ற வாகனங்களை அவதானிக்காது பயணித்த கார் தரித்து நின்ற வானுடன் மோதியுள்ளது. விபத்துக்குள்ளான வான் முன்னால் தரித்த நின்ற மோட்டார் சைக்கிளுடன் சென்று எதிரே நின்ற டிப்பர் வாகனத்துடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் தரித்திருந்த ஒருவரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-8-100-316)

# காட்டு யானை அட்டகாசம்; யானைவேலி அமைக்க கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதால் தமது வாழ்வாதாரப் பயிர்கள் அழிக்கப்படுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களில் தினமும் காட்டு யானைகள் புகுந்து பெரும் அழிவை ஏற்படுத்தி வருவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வேளை காட்டு யானைகளால் பெரும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அண்மையில் கூட சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் ஒரே நாளில் அழிக்கப்பட்டதாகவும் தங்களுடைய பிரதேசங்களை நோக்கி இப்போது காட்டு யானைகளினுடைய வருகையும் அதிகரித்து காணப்படுவதால் தங்களுடைய பிரதேசங்களை சூழ யானை வேலி களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-8-315)

# பொருத்தமற்ற இடத்தில் பொதுச்சந்தை வர்த்தகர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

வடக்கு மாகாணத்தின் பிரதான நகரமாகக் காணப்படும் மாங்குளம் பகுதியில் பொதுச் சந்தை மற்றும் பேருந்து நிலையம் என்பன உரிய இடங்களில் அமையப்பெறவில்லை என்றும் இதனால் பெரும்பாலானவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து உள்ளனர் என்றும் பிரதேச வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தின் தலைநகரமாகக் காணப்படுகின்ற மாங்குளம் பகுதியானது 1983 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒரு பகுதியாகவும் இரவு-பகலாக சந்தைகள் இடம்பெறுகின்ற இடமாகவும் காணப்பட்டது.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பாதிப்படைந்தது. இருப்பினும் பல மில்லியன் ரூபாய் செலவில் பொதுச் சந்தை கட்டடங்கள், கடைகள், மலசலகூட வசதிகள் என பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கிகடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே இந்த சந்தை திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டது.

இந்த நிலையில் அதிகளவான வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் சந்தை பொருத்தமற்ற இடத்தில் அமையப் பெற்றுள்ளமையால் நுகர்வோர் வருகையின்மை காரணமாக வர்த்தகர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டது. இதனால் அதிகமானவர்கள் வர்த்தக நடவடிக்கைகளை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை மாங்குளம் நகருக்கான பேருந்து நிலையம் பொதுச் சந்தைக்கு அண்மித்த பகுதியில் அமையப் பெற்றுள்ளதுடன் இதுவரை திறந்து வைக்கப்படாத நிலையில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகிறது என அப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (5-4-8-315)

# குடிநீர் திட்டத்தை விரைவுபடுத்துங்கள் முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரத்திற்கான குடிநீர் வேலைத் திட்டங்கள் நிறைவு பெறாமல் காணப்படுகின்றது. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் மூன்றாண்டுகளுக்கு மேலாக குடிநீர்த் திட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் வேலைகள் நிறைவு பெறாமல் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரத்திற்கான குடிநீர்த் திட்டத்திற்கான நீர் மூலமாக வற்றாப்பளை பெரும் பீலிப் பகுதியில் ஆழ் துளைக் கிணறுகள் மூலம் நீர் வழங்குவதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்ட போது ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீர்வழங்கலை மேற்கொண்டால் வற்றாப்பளை உட்பட பல பகுதிகளில் நிலத்தடி நீர் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் என எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முல்லைத்தீவு நகரத்திற்கான குடிநீருக்கான நீர் மூலகமாக மதவாளசிங்கம் குளத்தினை பயன்படுத்தலாம் என ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. இதற்கான இணைக்கப்பாடுகளையும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்திருந்தது. ஒரு நகரத்திற்கான நீர் மூலகமாக ஆழ்துளைக் கிணறுகளை பயன்படுத்தாமல் குளங்கள் அல்லது பிற நீர் நிலைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது பொது அமைப்புகளின் கோரிக்கையாகும்.

ஒரு நகரத்திற்கான குடிநீர்த்திட்டத்திற்காக ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தப்படுமானால் எதிர்காலத்தில் நிலத்தடி நீர் பாதிக்கப்படும். முல்லைத்தீவு நகர குடிநீர்த் திட்டத்திற்கு சிறந்த நீர் மூலகத்தினை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இனங்கண்டு விரைவாக குடிநீர் வழங்க வேண்டும் என்பது முல்லைத்தீவு நகர மக்களின் கோரிக்கையாகும். (4-8-350)



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியின் சோரன்பற்றுப் பகுதியில் கொவிட் - 19 அச்சுறுத்தல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் ஒழுங்குபடுத்தலில் 16 குடும்பங்களுக்கு இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

(படம்:- கிருஸ்ணகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

11.05.2021
சித்திரை 28, செவ்வாய்க்கிழமை
அமாவாசை பின்னிரவு 12.58 மணிவரை
பரணி பின்னிரவு 12.03 மணிவரை
சுபநேரம் 10.24-11.54 மணிவரை
இராகுகாலம் 2.54-4.24 மணிவரை
சந்திராஷ்டமம்:- அத்தம், சித்திரை
அமாவாசை விரதம் வளவன்


மேஷம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படுவீர்கள்.


ரிஷபம்

பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், பொறுமையாகச் செயற்படுவது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மிதுனம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், ஒளிமயமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.


சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


கன்னி

சஞ்சலங்கள் தீர குலதெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


துலாம்

சென்ற இடங்களில் சிறப்படைவீர்கள், பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்

செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உடல் நலன் சீராகும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.


தனுசு

எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.


மகரம்

உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கும்பம்

தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், எதற்காகவும் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மீனம்

பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

# கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காவிடின் தொற்று கட்டுக்கடங்காது- சுதத்

(கொழும்பு)

**தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் பயணக் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காவிடின் கொவிட் 19 பரவல் தொடர்ந்தும் அதிகரிக்கும் என தொற்று நோய் தடுப்புப் பிரிவின் தொற்று நோய் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொவிட் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் தொற்று உறுதியானவர்களுடன் தொடர்பை பேணியவர்களே இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே பொதுமக்கள் பயணக்கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காவிடின் இந்நிலைமை தொடர்ந்தும் நீடிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பி.சி.ஆர். முடிவுகளின் தாமதத்தாலே தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதமாக வெளியாகியதாலேயே நேற்றைய தினம் நாட்டில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் பதிவாகியதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள அதிகாரி, நாட்டில் அதிக எண்ணிக்கையிலான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதால் கடந்த சில நாட்களாக பி.சி.ஆர் முடிவு அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒரு நாளைக்கு சுமார் 15 ஆயிரம் பி.சி.ஆர்.மாதிரிகள் சோதனை செய்யப்படுவதாகவும் சில சந்தர்ப்பங்களில் இது ஒரு நாளைக்கு 20 ஆயிரமாக அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# கடல்சார் பாதுகாப்புகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன

## கடற்படை தலைமையகம் தெரிவிப்பு



(கொழும்பு)

கொரோனா தொற்று வேகமாக பரவல் சூழலில், கடல் மார்க்கமாக இலங்கைக்குள் சட்டவிரோதமாக எவரும் நுழைவதை தடுக்கும் பொருட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகளை கடற்படையினர் இரட்டிப்பாக்கியுள்ளனர்.

[illegible] கடற்பரப்பின் பாதுகாப்பு [illegible]த்தில் பலப்படுத்தப்பட்டபோதும் தற்போதைய சூழலில் நாட்டை சூழ கடற்பரப்பின் பாதுகாப்பை பலப்படுத்தி, அதனை இரட்டிப்பாக்கியுள்ளதாக கடற்படை தலைமையகம் தெரிவித்தது.

அதன்படி நேற்று முன்தினம் ரோந்து மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

ரோந்து மற்றும் இதர பணிகளில் ஈடுபடுத்தப்படும் படகுகள், அதிகாரிகளின் எண்ணிக்கையையும் அதிகரித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடற்பரப்புக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக, கரையோரம் மற்றும் ஆழ்கடலில் கடற்படை படகுகள், கண்காணிப்பு கப்பல்கள் ஊடாக பூரண மேற்பார்வைகளை முன்னெடுக்கவும், சர்வதேச கடற்பரப்பினில் கடற்படையின் அதிவேக படகுகள் மற்றும் தாக்குதல் படகுகளை கடமையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நட்புக்குத் துரோகம்

ஒரு காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் நண்பர்களாகப் பழகத் தீர்மானித்தன. இரண்டும் சேர்ந்து ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டன.

நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரை தேடச் செல்ல வேண்டும் என்றும், இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும், நரியும், கழுதையும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள் நரி, தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக தன் இருப்பிடத்தை விட்டு கழுதை இருக்குமிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சிறிது தூரம் சென்றதும், அந்தப் பக்கமாக சென்ற சிங்கத்தைக் கண்டு நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா? என யோசித்தது.

ஒரு வழி நரிக்குப் புலப்பட்டது. அதாவது, தன் நண்பன் கழுதையைக் காட்டிக் கொடுத்து விட்டு, தான் தப்பித்துக் கொள்வது என்பதுதான் அந்த வழி.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, "மன்னாதி மன்னா! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போவதில்லை.

உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்ய முடியும். என் நண்பனாக, கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்கிறேன். அந்தக்கழுதை, இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்!" என்று கூறிற்று.



அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக்கொண்டது. நரி, சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழு தையின் இருப்பிடத்திற்குச் சென்றது.

"நண்பனே! இரை தேடச் செல்லலாமா?" என, கழுதையை அழைத்துக்கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து நிறுத்தியது நரி. சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம், நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது.

நரி பதறிப் போய், "மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் காண்பிக்க வந்தேன். இப்போது என்னையே கொல்ல வந்து விட்டீர்களே!" என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

"நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுக்கத் தயங்காத உன்னை நம்ப முடியாது. நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம்.

ஆகவே, உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது."" என்று கூறிக் கொண்டே சிங்கம், நரியையும் கொன்று வீழ்த்தியது.

இதற்குத்தான் கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமை தான் ஏற்படும்.

# மகாபாரதம்


கர்ணன் சொன்னதை பீஷ்மர் ஏற்கவில்லை. திருதராட்டிரன் தூதுவனை திரும்பிப் போக பணித்தான்.

பின் திருதராட்டிரன் கௌரவர்கள் கருத்தை பாண்டவர்களுக்குத்தெரிவிக்க சஞ்சயனை தூதுவனாக பாண்டவர்களிடம் அனுப்பினான்.

"இந்திரப் பிரஸ்தத்தை மட்டுமல்ல ஒரு கையளவு நிலம் கூட பாண்டவர்க்கு தர முடியாது.

போர் வருமேயாயின் பாண்டவர் தோல்வியைத் தழுவுவர்" என்றான் சஞ்சயன் பாண்டவர்களிடம்.

போரில் தருமருக்கு விருப்பமில்லை. ஆனாலும் நாட்டைத் திருப்பித் தராவிடின் போர்




தவிரவேறு வழியில்லை என அறிந்துகொண்ட சஞ்சயன் அதை திருதராட்டிரனிடம் வந்து தெரிவித்தான்.

திருதராட்டிரன் விதுரரை அழைத்து அவர் கருத்தைக் கேட்டான். விதுரர் நீதிகளைக் கூறினார். பாண்டவர்களை வீரம் மட்டும் காக்கவில்லை. அவர்கள் போற்றும் தர்மம்தான் அவர்களின் உன்னத படை என்றார்.

மேலும் துரியோதனனிடம் அது இல்லை என்றும் அவன் மகத்தான துன்பம் அடையப் போகிறான் என்றும் உரைத்தார்.

திருதராட்டிரன் விதுரர் கூறியது உண்மை என்பதை அறிந்தாலும் புத்திர பாசத்தால் மதி இழந்து தடுமாறினார். அடுத்த நாள் சபையில் இது தெரிவிக்கப்பட்டது.

பீஷ்மர் "இன்னமும் காலம்கடத்தாமல் பாண்டவர்களின் நாட்டை திருப்பிக் கொடுங்கள். இல்லை யேல் யுத்தத்தில் அனைவரும் மாண்டு விடுவோம்" என்றார்.

வழக்கம் போல பீஷ்மரை கர்ணன் பழித்தான். "இவர் நம்முடன் இருந்தாலும் இவர் மனம் பாண்டவர் வசமே உள்ளது. யுத்தம் வந்தால் நான் ஒருவனே பகைவர்கள் அனைவரையும் அழிப்பேன்" என்றான். கர்ணனைக் கண்டித்தார் பீஷ்மர். "உன் வீரம் அனைவருக்கும் தெரியும் வெட்டித் தனமாய் பேசாதே" என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஒப்பந்தங்களை புதுப்பிக்கப் போவதில்லை

## பிரான்ஸ் அதிரடித் தகவல்

(மொஸ்கோ)

**பிரித்தானியா- சுவீடன் கொரோனா தடுப்பூசியான அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி ஒப்பந்தங்கள் எதனையும் புதுப்பிக்கப் போவதில்லை என பிரான்ஸ் அறிவித்துள்ளது.**



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'ஐரோப்பாவின் எதிர்காலம்' என்ற மாநாட்டில் இந்த அறிவிப்பினை பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் அறிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

'பிரான்ஸில் நாங்களும், ஐரோப்பாவும் தொடர்ந்தும் அஸ்ட்ராஜெனெகாவை உபயோகிக்க வேண்டும். மிகவும் சிக்கலான காலத்தில் அஸ்ட்ராஜெனெகா எங்களிற்குப் பெரிதும் உதவியது.

ஆனால், தற்போதுள்ள புதிய பல மரபணுத்திரிபு வைரஸ்களிற்கான சக்தியுள்ள வேறு கொரோனா தடுப்பூசிகள் உள்ளன. அவற்றை உபயோகிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்' எனக்கூறினார். (நி-4-8)

## சிறுக சேமித்ததை கொரோனா நிவாரண நிதிக்கு வழங்கிய சிறுவன்



(மதுரை)

மதுரை ஆரப்பாளையத்தைச் சேர்ந்த ஹரிஸ்வர்மன் (வயது 7). 2-ம் வகுப்பு படித்து வருகிறார்.

இவர் சைக்கிள் வாங்குவதற்காக சேமித்து வைத்திருந்த ஆயிரம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தனது தந்தை மூலம் அனுப்பி வைத்தார்.

இதனை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சிறுவன் ஹரிஸ்வர்மனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாராட்டு தெரிவித்தார்.

மேலும் அந்த சிறுவனுக்கு புதிய சைக்கிளை பரிசாக வாங்கி கொடுத்து வாழ்த்தினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கிய சைக்கிளை மதுரை மாநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சிறுவனிடம் நேரில் ஒப்படைத்தார்.

தனக்கு சைக்கிள் வழங்கியதற்கு சிறுவன் தொலைபேசி மூலம் முதலமைச்சருக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். (நி-4-8)

## 40,000 ஆண்டுகளுக்கு முன் அழிந்த நியாண்டர்தால் மனிதர்களின் உடல்கள்




(ரோம்)

இத்தாலியின் ரோம் நகரின் தென் கிழக்கு பகுதியில் கழுதை புலிகளால் வேட்டையாடப்பட்ட ஒன்பது நியாண்டர்தால் மனிதர்களின் உடல் எச்சங்களை வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய குகை ஒன்றில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்

மண்டை ஓடுகள், உடைந்த தாடைகள் கொண்ட அந்த எச்சங்கள் கடற்கரை நகரமான சான்ஃபெலிஸ் சிர்சியோவில் உள்ள குட்டாரி குகையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மனித இனத்தின் ஆதி உறவினர்களாக கருதப்படும் இந்த நியாண்டர்தால் மக்கள் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அழிந்து விட்டதாக கூறப்படுகிறது.

அதில் பழைமையானதாக கருதப்படும் எச்சம், 90 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என இத்தாலியின் கலாசார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-4-8)

## எதிர்க்கட்சித் தலைவரானார் எடப்பாடி பழனிச்சாமி



(சென்னை)


தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. தனிப்பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று, ஆட்சிக்கு வந்துள்ளது.

65 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள அ.தி.மு.க., சட்டமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெறுகிறது. எதிர்க்கட்சி தலைவர் யார்? என்பதில் காரசார விவாதம் நடைபெற்றது.

இந்நிலையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக்காலை தொடங்கியது.

மூன்றுமணி நேரமாக நடைபெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். (நி-4-8)

## தடுப்பூசியின் விலை 6 மடங்கு உயர்வு







(டில்லி)

இந்தியாவில் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக கொவிஷீல்ட், கோவக்சின் ஆகிய 2 தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு போடப்பட்டு வருகின்றன.

தடுப்பூசிகள் தலா ரூ. 250-க்கு மத்திய அரசால் பெறப்பட்டு வழங்கப்படுகிறது.

ஆனால் தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசி விலை 6 மடங்கு அதிக கட்டணத்தில் பொது மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு தனியார் மருத்துவமனையும் வெவ்வேறு விதமான விலையைத் தடுப்பூசிக்கு நிர்ணயம் செய்து உள்ளன. டில்லி, மும்பையில் உள்ள மருத்துவமனைகள் ஒரு தடவை தடுப்பூசி போட ரூ.900 வசூலிக்கின்றன.

சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ரூ.1250 வரை வசூல் செய்கிறது. நாட்டிலேயே பெங்களூரில் அதிகபட்சமாக ஒரு தனியார் மருத்துவமனை ஒரு தடவை தடுப்பூசி போட ரூ.1500 வரை கட்டணம் நிர்ணயித்துள்ளது. (நி-4-8)

## மனிதநேயம் இன்னும் வாழ்கிறது

(டில்லி)

குஜராத் மாநிலம் அகமதாபாத்தை சேர்ந்தவர் 5 மாத ஒரு ஆண் குழந்தையின் செயற்பாடுகளைக் கண்ட மருத்துவர்கள் குழந்தையைப் பரிசோதித்தபோது மிகவும் அபூர்வமான மரபணு கோளாறுடைய **'Spinal Muscular Atrophy Type-I'** என்ற நோய் தாக்கியிருப்பது தெரியவந்தது.

இந்நோய் சிகிச்சைக்குத் தேவையான மருந்து அமெரிக்காவில்தான் கிடைக்கும். அதன் ஒரு டோஸ் ரூ.16 கோடி என்றது மருத்துவமனை நிர்வாகம்.

42 நாட்களில் மொத்தம் 16 கோடி நிதி வசூலானது. இதனை 2.6 இலட்சம் பேர் தொண்டுள்ளத்தோடு வழங்கினர். உடனே அமெரிக்காவில் இருந்து மருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அதனை வெற்றிகரமாக குழந்தைக்கு செலுத்தியுள்ளனர். (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 308 345**

**தொற்று :-159 030 388**

**(நேற்றைய நிலவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு முன்னுரிமையளிக்கும் சீனா விரைவில் மருத்துவ உதவிகள்

(கொழும்பு)

இலங்கைக்கு ஒட்சிசன் மற்றும் செயற்கை சுவாச இயந்திரங்களை வழங்குமாறு அரசாங்கம் சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் மூலம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சீனா இலங்கைக்கு ஒட்சிசன் சிலிண்டர் மற்றும் செயற்கை சுவாச கருவிகளை வழங்கவுள்ளது.

இலங்கைக்கு சீனா முன்னுரிமை அளிப்பதாகவும் சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார். அதற்கமைய விரைவில் இலங்கைக்கு ஒட்சிசன் உள்ளிட்ட மருத்துவ உதவிகளை வழங்க சீனத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# தடுப்பூசி செலுத்தாவிடின் தனியார் பேருந்துகள் ஓடாது

(கொழும்பு)

சகல தனியார் பேருந்து சேவையாளர்களுக்கும் இவ்வாரத்துக்குள் கொரோனாத் தொற்றை தடுப்பதற்கான தடுப்பூசியை ஏற்ற வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் பேருந்து சேவைகளில் இருந்து விலகிக் கொள்வதற்கு ஒன்றிணைந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வரையிலும் அரசாங்கத்துக்கு காலக்கெடு விதித்துள்ளோம் எனத் தெரிவித்த கெமுனு விஜேரத்ன, அதற்கிடையில் சகல தனியார் பேருந்துகளின் சேவையாளர்களுக்கும் தடுப்பூசியை ஏற்றுவதற்கான வழிவகைகளை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

தனியார் பேருந்து நடத்துநர்கள் மற்றும் சாரதிகளில் பலர், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

# மேலும் 600 குடும்பங்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி



(கொழும்பு)

இலங்கையில் மேலும் 600 குடும்பங்களுக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசி செலுத்தப்பட்டது. யக்கல பகுதியிலுள்ள நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 600 குடும்பங்களுக்கே நேற்று முன்தினம் இவ்வாறு தடுப்பூசி செலுத்தப்பட்டது. (நி-4)

# இரும்பு சேகரிப்பு போர்வையில் போதை மாத்திரை விற்பனை



(கொழும்பு)

பழைய இரும்பு சேகரிக்கும் போர்வையில் பட்டா வாகனம் ஒன்றில் போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 590 இற்கும் அதிகமான போதை மாத்திரைகள் அடங்கிய பெட்டிகள் மற்றும் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டதாக கல்முனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர் சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இரும்பு சேகரித்து விற்பனை செய்பவர் எனவும் சந்தேக நபர் அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்களுக்கு குறித்த போதை அடங்கிய மாத்திரைகளை விநியோகித்து வந்துள்ளதாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2310

### செரோன்




### ஜெகனி




### சிவரதி




### யதுசன்




### காயத்திரி




### பிரதீபன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணித்தியாலத்திற்கு 25 கோடி கடன் பெறும் நிலையிலே அரசாங்கம்

## சுனில் ஹந்துன்னெத்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)


அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக 1950 ஆம் ஆண்டின் பின்னர் 2020 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் மிக மோசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

அரசாங்கத்தின் சகாக்களுக்காக அநாவசிய வரிச்சலுகைகளை வழங்கியமையே இவ்வாறான பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2020 இல் இலங்கை பொருளாதார வளர்ச்சி வேகம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாண்டு அதனை விடவும் சவால் மிக்க வருடமாகவுள்ளது.



காரணம் அநாவசியமாக வரிகளை விலக்குவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளாகும். பெருமளவில் வரிச் சலுகைகள் வழங்கப்பட்ட போதிலும் அதன் எவ்வித பயனும் மக்களுக்கு கிடைக்கவில்லை.

2020 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் செலவுகள் 3,040 பில்லியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மிகவும் சூட்சுமமாகவே 2019 ஐ விட 2020 இல் செலவுகள் குறைவு என அரசாங்கம் காண்பித்துள்ளது.

422 பில்லியனை மறைத்து இந்த தொகையை காண்பித்துள்ளது. அதற்கமைய உண்மையில் 2020 இல் அரசாங்கத்தின் செலவு 3,462 பில்லியனாகும்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார முன்னெடுப்புக்கள் தவறானவை என்பது இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் நாட்டை கடன் பொறிக்குள் சிக்க வைத்துள்ளது.

இன்று மணித்தியாலத்திற்கு 25 கோடி ரூபாய் கடன் பெறும் அரசாங்கமே காணப்படுகிறது. அரசாங்கத்தின் வருமானத்தை விட வருடத்தில் அரசாங்கம் பெறும் கடன் அளவு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் மாத்திரம் 454 பில்லியன் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறவில்லை என்று அரசாங்கம் கூறுகின்ற போதிலும் கடன் பங்கினை பாரியளவில் அதிகரித்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (நி-4)

# போக்குவரத்துக் கட்டுப்பாடுகள்; தேவைப்பட்டால் செயற்படுத்துவோம்

## இராணுவத் தளபதி விளக்கம்

(கொழும்பு)

ரம்ழான் பண்டிகையுடனான நீண்ட விடுமுறைக்கு இடைப்பட்ட நாட்களில் நிலைமையைக் கருத்திற் கொண்டு போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் நிச்சயம் அதனை செயற்படுத்துவோம்.

தேவை ஏற்படாவிடின் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட மாட்டாது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனினும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமையவே இது குறித்த தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் இராணுவத்தளபதி சுட்டிக்காட்டினார்.



எதிர்வரும் வெள்ளிக்கிழமை ரம்ழான் விடுமுறை மற்றும் அடுத்த நாட்களில் வார இறுதி விடுமுறை என்பதால் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமா? என்பது தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே இராணுவத்தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போதுள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு முழு நாட்டையும் முடக்காமல் தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்படும் பிரதேசங்களை மாத்திரம் தனிமைப்படுத்தும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் ரம்ழான் பண்டிகையுடனான நீண்ட விடுமுறைக்கு இன்னும் சில நாட்கள் உள்ளன.

இதற்கு இடைப்பட்ட நாட்களில் நிலைமையைக் கருத்திற் கொண்டு போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் நிச்சயம் அதனை செயற்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கருத்துத் திணிப்பு!

ஒரு அப்பாவுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் மிகவும் அடக்கம். அப்பா எது சொன்னாலும் கேட்பான். பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பான்.

இளையவன் அப்படி இல்லை. தான் நினைக் கிறதைத்தான் சொல்லுவான், செய்வான். அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்க மாட்டான். அடங்கி நடக்க மாட்டான். இந்த இரண்டு பேரில் யாரை உங்களுக்குப் பிடிக்கும்? பெரியவனைத்தான் பிடிக்கும். ஏன் என்றால் அவன் தான் சொல்கின்ற பேச்சைக் கேட்கிறவன் என்று சொல்வீர்கள்.

ஆனால் ஓஷோ என்ன சொல்கின்றார் தெரியுமா? ஒரு குழந்தை அதன் அறிவுக்காக மதிக்கப்பட வேண்டுமே தவிர, அதன் கீழ்ப்படியும் தன்மைக்காக அல்ல என்கின்றார்.

எங்கள் குழந்தைகளை சுயமாக சிந்திப்பதற்கு நாம் விடுவதில்லை. மற்றவர்கள் செய்வதைப் பார்த்து அதைப் பின்பற்றுவதற்குத் தான் நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றோம்.

புகழ்பெற்ற மனிதர்கள் சிலருடைய பேரைச் சொல்லி நீ அவர் மாதிரி ஆக வேண்டும். இவர் மாதிரி ஆக வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறோம்.

குழந்தைகள் தங்களுடைய தனித்தன்மையை வளர்த்துக் கொள்வதற்கு நாம் தடையாக இருக்கின்றோம். ஒரு குழந்தையிடம் அநாவசியமாக நம்பிக்கையை வளர்க்கக் கூடாது. எந்தக் கோட்பாட்டையும் திணிக்க்க கூடாது. நாம் ஏற்கனவே அர்த்தமில்லாத கருத்துக்களையும் கொள்கைகளையும் மனதிலே போட்டு நிரப்பி வைத்தி ருக்கின்றோம்.

இந்த உலகத்திற்குப் புதிதாக வந்து சேர்ந்திருக்கின்ற ஒரு குழந்தையின் தூய்மையான மனதிலே நம்முடைய கருத்துக்களை அறிமுகம் செய்வதற்கு அல்லது திணிப்பதற்கு நமக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

ஒரு குழந்தையை நீ இந்த மதத்தைச் சேர்ந்தவன் என்று பிறந்ததுமே ஒரு முத்திரை குத்தி விடுகின்றோம். இது அதன் சுதந்திரத்தை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிவது மாதிரித்தான்.

நீங்கள் ஒரு மதத்தின் வழிமுறைகளைக் கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றீர்கள். அந்த வழியில் போய் கொண்டிருக்கின்றீர்கள்.. உங்களுக்கு அந்த மார்க்கம் பிடித்திருக்கு. அதனால் போகின்றீர்கள். அதற்காக உங்கள் குழந்தையும் அதே வழியில் தான் வரவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அந்தக் குழந்தை சுயமாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வரட்டுமே. அதற்கு நீங்கள் ஏன் தடையாக இருக்கின்றீர்கள்?

நமக்கு உண்மையிலேயே எங்கள் குழந்தை மேல் அன்பு இருந்தால்... இதுமாதிரி திணிப்பு வேலைகளைச் செய்யக் கூடாது. திணிப்பு வேலைகளிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றினால் போதும். அடுத்த தலைமுறை அற்புதமான தலைமுறையாக உருவாகும்.

நாம் தான் சாதி, மத சங்கடங்களில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றோம். அவர்களாவது சாதி, மத வேறுபாடில்லாத சமுதாயத்தைப் பார்க்கட்டுமே.

அந்த சௌகரியங்களை அனுபவிக்கட்டுமே. அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்றால்... ஒன்றும் செய்யாமல் இருந்தாலே போதும்.

ஒரு குழந்தையிடம் எங்கள் கருத்தைத் திணிக்கும்போது என்ன ஆகுகின்றது தெரியுமா? அது..அவனை அவனிடமிருந்தே அப்புறப்படுத்தி விடுகின்றது.

அவனுடைய தனித்தன்மையை அழித்து விடுகின்றது. அவனை ஒரு எல்லைக்குள்ளே திணித்து விடுகின்றது. கடைசியில் அவனை ஒரு மதவெறியனாக ஆக்கிவிடுகின்றது.

இது எல்லாம் அன்பு என்கின்ற பெயராலே பெற்றோர்கள் செய்கின்ற தவறு. இதையெல்லாம் கேட்டுக் கொண்டு இந்தக் காலத்து அப்பா ஒருத்தர் சொன்னார்.

நான் கருத்துக்களையெல்லாம் என் பையனிடம் திணிக்கிறது இல்லைங்க.. ஆனால் அதிகமாக சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்துவேன் என்றார். உங்கள் வீட்டு சமையல் அவ்வளவு நல்லா இருக்குமா? என்றேன். நல்லா இருந்தால் நான் ஏன் அவனை சாப்பிட கட்டாயப்படுத்தப் போகின்றேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 36 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



சுமார் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான வேலைகள் இன்னமும் பூர்த்தியடையாத நிலையில் இக் கட்டடத்தினை திறந்து தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டாம். புத்தகங்கள் அற்ற வெறும் கட்டடமாக நூல்நிலையம் அமைந்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காகவே திறப்பு விழாவை முழு வேலைகளும் பூர்த்தியாகும் வரை பிற்போடுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இல்லையேல் எதிர்வரும் 14ஆம் திகதி மாணவர்களும், மக்களும் இணைந்து நூல்நிலையம் முன் மறியல் போராட்டம் நடத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

இவ்வாறன கடிதம், 13.02.2003 திகதிய வலம்புரி பத்திரிகையில் வந்திருந்தது.

### 14.02.2003இல் யாழ். பொது நூலகம் சம்பந்தமாக வலம்புரி பத்திரிகையில் வந்த செய்தி

"யாழ். நூலகத் திறப்பு விழா ரத்து. மாநகர முதல்வர்-உறுப்பினர்கள் கூண்டோடு இராஜினாமா"

"யாழ். பொதுசன நூல் நிலையத்தை இன்று காலை திறப்பதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியான நிலையில், யாழ். மாநகர சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் 72 மணித்தியாலங்கள் இருக்கையில், மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் உட்பட சபை உறுப்பினர்கள் திடீரென இராஜினாமா செய்துள்ளனர். பல கோடிக்கணக்கான ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூல் நிலையத்தை திறந்து வைப்பதற்கு எழுந்த சர்ச்சைகளை அடுத்து நேற்றுக் காலை யாழ். மாநகர சபையின் விசேட கூட்டத்தில், இன்று நடைபெற இருந்த யாழ். நூலகத் திறப்பு விழா ரத்து செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் உட்பட 7 உறுப்பினர்கள் தமது பதவிகளை நேற்று உடனடியாக இராஜினாமா செய்தனர். 23 உறுப்பினர்களைக் கொண்ட யாழ் மாநகர சபையில் ஏனைய உறுப்பினர்கள் இன்று தமது இராஜினாமா கடிதங்களை சமர்ப்பிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது."

யாழ். பொது நூலக திறப்பு விழா ரத்துச் செய்யப்படுவது குறித்தும் தமது இராஜினாமாக்கள் குறித்தும் யாழ். மாநகரசபை முதல்வர் உட்பட சபை உறுப்பினர்கள் கையெழுதிட்டு நேற்று அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட நான்கு ஜனநாயகக் கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகர சபை ஏகமனதான தீர்மானங்கள் மூலம் செயற்பட்டு வந்தது. மாநகராட்சியின் அதிகாரத்திற்கு கீழ்வரும் நூல்நிலையம் திறப்பது பற்றி பல்வேறு விவாதங்கள், மக்கள் அபிப்பிராயங்கள் என்பவற்றின் அடிப்படையில், இன்றைய தினம் திறப்பதாக தீர்மானிக்கப்பட்டது. நூல் நிலையத்தின் புனரமைப்பிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட 120 மில்லியன் நிதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் நிதியிலிருந்தும் முழுமையாகப்பெற்று கட்டட வேலை கிட்டத்தட்ட முழுமையடையும் நிலையில் உள்ளது.

"லிப்ற்", "கன்ரீன்" போன்ற அமைப்பு வேலைகளுக்காக 21 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டு அதற்குரிய நிதியைத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

"திறப்பு விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத் தருணத்தில் ஒன்றியங்கள் மூலமும், பத்திரிகை மூலமும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டன. யாழ். நூல் நிலையத்தின் திறப்புக்கள் அபகரிக்கப்பட்டது. ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். நகரபிதா, உறுப்பினர்கள் கூட கடுமையாக அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

"மக்களுக்கு தேவையான இந் நூல் நிலையம் திறப்பதில் தமிழீழ அரசியல் பிரிவு இவ்வாறு தீவிரமாக செயற்படுவது துரதிஷ்ட வசமானது. அறிவுக் கருவூலமான நூல் நிலையத்தை திறப்பதற்கு மக்களின் அமைப்புக்கள் என்று கூறிக் கொள்பவர்கள் நடந்து கொண்ட முறையையிட்டு நாங்கள் வேதனை அடைகின்றோம்.

"ஜனநாயக நிறுவனமான மாநகராட்சி தன்னுடைய பராமரிப்பில் உள்ள நூல் நிலையத்தை திறப்பதற்கு முடியாத சூழ்நிலையில், உறுப்பினர்களாக தொடர்ந்தும் இருப்பதற்கு எந்த உறுப்பினரும் விரும்பவில்லை. குடாநாட்டிலுள்ள ஜனநாயக சூழ்நிலை இப்படித்தான் இருக்கிறது. இந்த நாடும் சர்வதேசமும் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும். ஜனநாயக மறுப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து உறுப்பினர்களாகிய நாங்கள் பதவியிலிருந்து இராஜினாமா செய்து கொள்கின்றோம்." இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது

### அன்றைய பத்திரிகையில் வந்த மற்றுமொரு செய்தி

"யாழ். மாநகர சபை நிர்வாகம் விசேட ஆணையாளரிடம்."

யாழ்ப்பரண மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையனும் மாநகர சபை உறுப்பினர்களும் இராஜினாமா செய்ததையடுத்து மாநகரசபையின் நிர்வாகம் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி தனது விசேட செய்தி ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது. யாழ். நூல்நிலையத் திறப்பு விழாவினையடுத்து எழுந்துள்ள சர்ச்சை காரணமாக கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் யாழ். முதல்வரும் மற்றும் உறுப்பினர்களும் இராஜினாமா செய்துள்ளதாக முதல்வர் செல்லன் கந்தையன் அறிவித்ததையடுத்து யாழ். மாநகர சபை விசேட ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

### பிரதம அதிதியாக கலந்துகொள்ளவிருந்த பாராளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரியின் கருத்து

பொது நூலகத் திறப்பு விழா கட்சிக்கு அப்பாற்பட்ட விடயம் எனவே தான் அதில் கலந்து கொள்வேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்திருந்தார். யாழ். நூலகத்தை திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மாநகர சபை நிர்வாகமே மேற்கொண்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அந்த ஏற்பாடுகளுக்கும் தொடர்பு இல்லை.

என்றாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை உறுப்பினர்கள் கூட்டாக விடுத்த வேண்டுகோளை ஏற்று திறப்பு விழாவில் கலந்து கொள்ள சம்மதித்தேன் என்று அவர் தெரிவித்தார். சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியிருக்கும் யாழ். பொதுசன நூலகத் திறப்புவிழா தொடர்பாக வீ.ஆனந்தசங்கரியின் நிலைப்பாடு என்ன என்று கேட்ட போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். பொது நூலகம் உலகத் தமிழர்களின் பொக்கிஷம். நீண்டகாலமாக அது கைவிடப்பட்டுக் கிடந்தது.

அதனை அப்படியே விட்டு வைப்பது தமிழர்களுக்கு நல்ல தல்ல. ஒரு வீட்டைக் கட்டுபவர் கட்டட வேலை முடியும் முன்னரே குடிபுகுந்து அதில் இருந்துகொண்டே எஞ்சிய வேலைகளைச் செய்து முடிப்பது வழமையல்லவா? அதுபோல நூலகத்தை திறந்து அதில் பணிகளை ஆரம்பித்துக் கொண்டு மேற்கொண்டு வேலைகளை முன்னெடுக்கலாம்தானே?

நூலகம் திறக்கப்பட்டால் உலகெங்குமிருந்து நூல்கள் பெருந்தொகையில் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். மாணவர்களுக்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமையும். நான் கூட இந்நூலகத்தில் படித்துத்தான் பட்டம் பெற்றேன். என்னைப்போல பலர் இங்கு கல்வி பெற்றிருக்கின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எந்தவகையில் ஞாயமாகும் என்பது புரியவில்லை. இது எனது அபிப்பிராயமாகும்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மாநகர சபையை நிர்வகித்து வந்த மேயரும் உறுப்பினர்களும் நூலகத்தை தங்களது பதவிக்காலத்தில் திறந்து வைக்க விரும்புவதில் என்ன தவறு இருக்கிறது? நூலகத்தை திறந்து வைக்கும் தீர்மானத்தை எடுத்தது மாநகரசபை நிர்வாகம் தான். அதில் கட்சிக்கு எந்த தொடர்பும் இல்லை. மூத்த தமிழ் நாடாளுமன்ற அரசியல்வாதி என என்னைக் கருதி நூலகத்தை வந்து திறந்து வையுங்கள் என்று அவர்கள் என்னைக் கேட்டனர். அதனை நான் ஏற்றுக் கொண்டேன். வெள்ளிக்கிழமை திறப்பு விழா நடந்தால் அதில் நான் கலந்து கொள்வேன். அவர்களுக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் அல்லவா? இவ்வாறு தெரிவித்தார் வீ. ஆனந்தசங்கரி.

### திறப்பு விழா நினைவுக்கல்லின் கதை

புனரமைப்பு செய்யப்பட்ட யாழ்ப்பாண பொதுசன நூலகம் அன்றைய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ. ஆனந்தசங்கரியினால் 14-02-2003 அன்று திறந்து வைக்கப்பட்டதாக மூன்று மொழிகளில் எழுதிய கல் திறப்பு விழா அன்று பதிப்பதற்கு தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால் திறப்பு விழா குறிக்கப்பட்ட நாளில் நடைபெறாத காரணத்தால் அது பதிக்கப்படவில்லை. அதைப்படத்தில் காணலாம்.

இந் நினைவுக்கல் ஏழு வருடங்களின் பின் 2010ஆம் ஆண்டு யூலை மாதத்தில் யாழ். நூலகக் கட்டடத்தில் பொருத்தப்பட்டது. பொருத்தப்பட்டபின் பல வாத விவாதங்கள் எழுந்தன. இது பற்றி பல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய வைரஸ்

# பாதிக்கப்பட்டவரால் ஆபத்தில்லை-சுதர்ஷினி

(கொழும்பு)

இந்திய கொரோனா வைரஸ் தொற்று நோயாளியான நபரினால் சமூகத்தில் தொற்று பரவும் ஆபத்து கிடையாது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

மேற்படி நபர் இரண்டு வார காலங்கள் மருத்துவமனையில் முறையான சிகிச்சை பெற்று அதன் பின்னர் ஏழு நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர் என்றும் ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் அவர் வெளிநாடு ஒன்றில் இருந்து இலங்கைக்கு வருகை தந்தவர் என்றும் அவர் தொடர்பில் சுகாதாரத்துறை அதிகாரிகள் மிகுந்த கண்காணிப்புடன் செயற்பட்டதனாலேயே அவரை இனங்கண்டு கொள்ள முடிந்துள்ளது.

மேற்படி நபர் 21 தினங்கள் தனிமையாக இருந்துள்ள நிலையில் அவர் மூலம் சமூகத்துக்கு இந்திய திரிபுபடுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று பரவும் ஆபத்து கிடையாது என தெரிவித்துள்ள அவர் எவ்வாறாயினும் அவர் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்புடன் செயற்படுமாறு இராஜாங்க அமைச்சர் சம்பந்தப்பட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.(நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



### விரதங்கள்

## பாவவினை போக்கும் தை அமாவாசை

(தொடர்ச்சி)

தமிழ் நாட்டில் இராமேஸ்வரம், வேதாரண்யம், திருவையாறு, வட மாநிலங்களில் காசி, திரிவேணிசங்கமம் ஆகிய இடங்களில் திதி கொடுப்பது சிறப்பானதாக கருதப்படுகிறது. அன்று சூரிய வழிபாடு செய்வதும் அவசியம்.

இறந்தவர்களின் நாள், திகதி தெரியாதவர்களும் 12 அமாவாசையன்றும் திதி கொடுக்க முடியாதவர்களும் தை, ஆடி மகாளய அமாவாசை திதிகளில் திதி கொடுக்கலாம். அவ்வாறு செய்வது ஆண்டுதோறும் திதி கொடுத்த பலனைக் கொடுக்கும்.

பித்ருக்கள் என அழைக்கப்படும் மூதாதையர்களின் திசை தெற்கு. சூரியன் புரட்டாதி மாதம் கன்னி இராசிக்குள் பிரவேசிப்பார். புரட்டாதி மாதம் பெருமாளுக்கு உகந்தது. அம்மாதத்தில் அவர் பித்ரு லோகம் செல்வார்.

பித்ருக்கள் அனைவரும் அவருக்கு பாத பூஜை செய்து வழிபடுவார்கள். இந்த பூஜைக்கு திலஸ்மார நிர்ல்ய தரிசன பூஜை என்று பெயர். இந்தப் பூஜையின் போது மகாவிஷ்ணு உடல் முழுவதும் எள் தானியம் நிறைந்த நிலையில் காட்சியளிப்பார்.

பித்ருக்களின் ஆராதனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் மகாவிஷ்ணு பித்ருக்களுக்கு அதற்கான பலன்களை வழங்குவார். அதே பலன்களைப் பித்ருக்களின் மூலம் பூமியில் வாழும் உறவுகளுக்கும் வழங்கி அருள்புரிவார்.

பின்னர் பித்ருக்களை 15 நாட்கள் பூலோகத்துக்குச் சென்று உங்கள் குடும்பத்தினருக்குப் பலன்கள் கொடுத்து வாருங்கள் என்று கூறி அனுப்பி வைப்பார். அவர்களும் மகிழ்ச்சியோடு பூலோகம் புறப்படுவார்கள்.

### அமாவாசையின் மகிமை

இன்று நிறைந்த அமாவாசை என்று சொல்ல கேள்விப்பட்டிருப்போம். பிரதமை முதல் அமாவாசை வரை மொத்தம் 15 திதிகள் இருக்கின்றன. இதில் அமாவாசை திதி தான் முக்கியமானது.

மற்ற திதிகளில் ஏதாவது ஒரு கிரகம், தோஷம் அடையும். ஆனால் அமாவாசை அன்று எந்தக் கிரகமும் தோஷம் அடையாது.

இதனால் அமாவாசையன்று சில செயல்களைத் தொடங்கினால் அது வெற்றி பெறும். ராகு - கேது மற்றும் கிரகங்களால் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண அமாவாசையன்று பரிகாரம் செய்தால் சிறப்பான பலன் கிடைக்கும்.

### காகத்திற்கு சாதம் படைப்பது ஏன்?



அமாவாசை வழிபாட்டில் காகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அன்று காகத்துக்குச் சாதம் வைத்து அது சாப்பிட்ட பின்னரே உணவருந்தும் பழக்கம் நடைமுறையில் உள்ளது. சனீஸ்வர பகவானின் வாகனமான காகம் எமலோகத்தின் வாசலில் இருக்குமென்றும் அது எமனின் தூதுவன் எனவும் கூறப்படுகிறது.

காகத்துக்கு சாதம் வைத்தால் எமலோகத்தில் வாழும் நமது முன்னோர்கள் அமைதியடைந்து நமக்கு ஆசி வழங்குவார்கள் என்று சாஸ்திரம் சொல்கிறது. காகம் சாதத்தினை எடுக்கா விட்டால் முன்னோர்களுக்கு ஏதோ மனக் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## கொரோனா கட்டுப்பாட்டு விவகாரத்தில் ஆதரவில்லை

(பதுளை)

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை கட்டுப்படுத்தும் விடயத்தில் ஊவா மற்றும் பதுளை மாவட்ட சுகாதார அதிகாரிகளிடமிருந்து முறையான ஆதரவு தமக்கு கிடைக்கிவில்லையென குற்றம் சுமத்தி, அம்மாவட்டத்திலுள்ள அனைத்து பொது சுகாதார பரிசோதகர்களும் சுகயீன விடுமுறையில் நேற்று திங்கட்கிழமை ஈடுபட்டனர். (நி-4)

## 24 மணிநேரத்தில் 351 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று முன்தினம் 351 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் குறித்த குற்றச்சாட்டுக்காக 7,316 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

கொவிட்-19 பரவலை தடுக்க பொதுமக்கள் இயலுமான வகையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொதுப் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும்போது முகக் கவசம், சமூக இடைவெளி என்பவற்றை அவசியம் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (நி-4)

## மருந்து வகைகளை வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ளலாம்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய கொரோனா நிலைமையை கருத்திற் கொண்டு, நோயாளர்கள் மருந்து வகைகளை தமது வீடுகளுக்கே வரவழைத்து பெற்றுக்கொள்ள விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நோயளர்களின் நலன் கருதி குறித்த வசதியை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஏற்படுத்தியுள்ளது.

அதற்கமைய, கண்டி, குருநாகல், கொழும்பு, கம்பஹா ஆகிய பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்து வகைகளைக்பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 100 | 120 |
| தக்காளி | 150 | 140 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 150 | 180 | 160 | 200 |
| பூசணி | 40 | 60 | 40 | 40 |
| புடோல் | 100 | 100 | 60 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 260 | 200 | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 150 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 120 | 140 |
| பயற்றங்காய் | 120 | 180 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 70 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 500 | 300 | 600 |
| போஞ்சி | 150 | 200 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 140 | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 40 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 300 | --- | --- | 280 |
| முள்ளங்கி | 100 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | --- | 80 | --- |

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் அபிவிருத்தி திட்டங்களை மீளாய்வு செய்யுமாறு

## டக்ளஸ் கோரிக்கை

(நல்லூர்)

**கடந்த காலங்களில் கைவிடப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி மீளாய்வு செய்ய வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**



வடக்கு மாகாணத்தில் நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்தியை ஏற்படுத் தும் நோக்கிலான கலந்துரையாடல் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

காணொளி ஊடாக நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கடந்த காலங்களில் கைவிடப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி மீளாய்வு செய்ய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.


பருத்தித்துறை, பேசாலை, குருநகர் ஆகிய துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள், நங்கூரமிடும் தளங்கள் உட்பட பல்வேறு வேலைத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டத்திற்கான நிதியுதவியை வழங்குவதற்கு கடந்த ஆட்சிக்காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி முன் வந்திருந்தது.

எனினும், அப்போதைய ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறித்த திட்டத்தினை கைவிடுவதற்கு தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், கைவிடப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தினை மீளச் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாக நேற்றைய கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த கருத்துக்களை ஏற்றுக் கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள், குறித்த விடயம் தொடர்பாக ஆராய்வதாக உறுதியளித்துள்ளனர்.

(4-8-33)



கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பீட மாணவர்கள் சிலர் நவீன முறையிலான நெல் நாற்று நடப்படும் செயற்பாட்டை கடந்த சனிக்கிழமை முன்னெடுத்தனர். (படம்-ரவிசாந்)


# வான்- மோ.சைக்கிள் விபத்து பெண்கள் காயம்

(முறிகண்டி)

கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார். குறித்த விபத்து நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஏ-9 வீதியின் 155 ஆம் கட்டைப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் செல்லும் வீதியை அண்மித்த பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள் ளது. ஒரே திசையில் பயணித்த மோட்டர் சைக்கிள் , வான் ஆகியன மோதி விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றையவர் சிறு காயங்களிற்குள்ளாகியுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்த வருகின்றனர். (5-4-100-316)



முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று அதிகாலை பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமாகியது. (படம்:-தவசீலன்)



யாழ்.பூமணி அம்மா அறக்கட்டளை அமைப்பினால் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கதிரைகள் ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலைக்கு கடந்த சனிக்கிழமை அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

# ஆளுநர் அலுவலகம் முன்பு கவனயீர்ப்பு போராட்டம்



(நல்லூர்)


வடக்கு மாகாணத்தில் தற்காலிக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய 970 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் செயலகம் முன் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் சேவையாற்றிய 840 பேரை சுகாதாரத் தொண்டர்களாக வடக்கு மாகாண சபையினால் உள்வாங்கப்பட்டனர்.

130 பேர் சுகாதாரத் தொண்டர்கள் தற்காலிகமாக கடமையாற்றிய நிலையில் அவர்களையும் இணைத்து 970 பேர் சுகாதாரத் தொண்டர்களாக பணி நிரந்தர நியமனம் கேட்டு போராடி வருகிறோம்.

ஆகவே வடமாகாணத்தில் சுகாதார்த் தொண்டர்களாக நிரந்தர நியமனம் கேட்டு விண்ணப்பித்த 970 பேருக்கும் குறித்த நியமனத்தை பாகுபாடின்றி தர வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (5-8-33)



வடமாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளருக்கான நியமனக் கடிதத்தை வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் ராஜேந்திரா சசீலனுக்கு நேற்று வழங்கினார். (படம்:-சிவசாந்தன். ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எதைப்பற்றிச் சிந்திக்கிறீர்களோ, அதுவே உங்கள் வாழ்க்கையாகிறது. எனவே, பெரிய அளவில் நல்ல சிந்தனைகளைச் சிந்தியுங்கள். அதில் நியாயமும் பண்பும் இருக்கட்டும்.* **– மௌரஸ்**

**வலம்புரி**
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவாச்சாரியப் பெருமக்களுக்கு ஓர் அவசர கடிதம்

வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய சிவாச்சாரியப் பெருமக்களுக்கு அன்பு வணக்கம்.

உங்களுக்கான, இக்கடிதம் அவசரமாக எழுதப்படுகிறது.

நேற்று முன்தினம் 09ஆம் திகதி காலை 9.48 மணி. யாழ்.பண்ணைச் சுற்றுவட்டத்தில் கடமையில் நின்ற போக்குவரத்துப் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் செல்பவர்களை இடைமறித்து அவர்களின் வாகன அனுமதிப் பத்திரங்களை சோதனையிட்டுக் கொண்டிருந்தனர்.

அந்நேரம் மோட்டார் சைக்கிளில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் வந்து கொண்டிருந்தார். போக்குவரத்துப் பொலிஸார் அவரை இடைமறிக்கவில்லை.

அதேசமயம் பட்டாடை அங்க வஸ்திரம், சிவசின்னமாகிய விபூதி அனுட்டானக் கோலம், பார்க்கும்போது பட்டெனத் தெரிகிறது அவர் சைவ சமய சிவாச்சாரியார் என்று.

இருந்தும் பொலிஸார் அவரை இடைமறித்து மோட்டார் சைக்கிளின் அத்தனை ஆவணங்களையும் சோதனையிட்ட பின்னர் அனுப்பி வைத்தனர்.

சாதாரண பயணிகள் போல சைவ சமய சிவாச்சாரியரை போக்குவரத்துப் பொலிஸார் நிறுத்தியது ஏன் என்பதுதான் எமக்குப் புரியவில்லை.

*அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்*
*வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான்*
என்றார் வள்ளுவர்.

வள்ளுவரால் மிக உயர்ந்த அறத்தின் சிரேஷ்டர்களாக அடையாளப்படுத்தப்படும் அந்தணப் பெருமக்கள் – சிவாச்சாரியப் பெருமக்களுக்கு நம் மண்ணில் இருக்கக்கூடிய மரியாதை எத்தகையது என்பது சிந்திக்கப்பட வேண்டும்.

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்* என்று வள்ளுவன் வகுத்த வகையில்,

எல்லா உயிர்களும் தொழக்கூடிய தகைமை சிவாச்சாரியப் பெருமக்களாகிய உங்களிடம் இருந்தபோதும் உங்களுக்கான கௌரவத்தை சம்பந்தப்பட்டவர்கள் தருவதில்லை எனில்,

அதுபற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதுதான் இவ் அவசரக் கடிதத்தின் நோக்கமாகும்.

அன்புக்குரிய சிவாச்சாரியப் பெருமக்களே! ஊரடங்கு வேளையிலும் சமய வழிபாட்டுக்காக பௌத்த, கத்தோலிக்க மதகுருமார்கள் வீதியில் பயணிக்க முடிகிறது.

ஆனால் முப்பொழுதும் நித்திய பூசை செய்ய வேண்டிய உங்களால் ஊரடங்கு பகல் வேளையில் பயணிக்க முடியவில்லை என்றால், இவை அத்தனைக்கும் காரணம் யார் என்றால், நீங்களே அன்றி வேறில்லை.

சிவப்பெருந்தகையீர்! உங்கள் தவறை நீங்களே திருத்த வேண்டும். அழைத்த விழாவுக்கெல்லாம் சென்று வேதம் ஓதி ஆசி வழங்காதிருப்பின், பிற மத நிகழ்வுகளில் ஓடிச் சென்று பங்குபற்றாது பகிஷ்கரித்து அறிக்கை விடுவீர்களாயின்,

அரசியல் தலைவர்கள் ஆலயம் வந் தால் – பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கும்பிட வந்தால், பஞ்சாலாத்தி காட்டி காளாஞ்சி கொடுப்பதை விடுத்து,

இந்த நாட்டில் எங்களுக்கு இருக்கக் கூடிய கௌரவம் என்ன? என்று துணிந்து கேட்டால்,

மாட்டைத் தின்னாததும் புலால் உண்ணாததும் உயிர்க்குறுகண் செய்யாததும் நாங்கள் செய்த தவறா? என்று உரக்கச் சொன்னால், நிச்சயம் அவர்கள் உங்கள் திருவடிகளில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அதன்பின் உங்களுக்கான மரியாதை இமயத்தைத் தொடும். இது சத்தியம்.

# போலி பேஸ்புக் கணக்குகளை நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

உரிமையாளர் அற்ற போலி சமூக வலைத் தளங்களை நீக்குவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி கிடைத்திருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சமூக வலைத் தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் போலியான பிரசாரங்களினால் அரசாங்கத்திற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும், உரிமையாளரற்ற வலைத் தளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பில் யார் பொறுப்புக் கூறுவது என்பது குறித்தே பிரச்சினை காணப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சுமார் 17 சதவீதமான கணக்குகள் உரிமையாளர் அற்றதாக காணப்படுகின்றது. அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தி அடைந்த ஜனநாயக நாடுகளில் கூட இவ்வாறு உரிமையாளர் அற்ற சமூக வலைத் தளங்களுக்கு ஒரு கட்டுப்பாடு இருப்பதாகவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார். (ம-3)

# துறைமுகப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேறும்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை மே 18 அல்லது 19 ஆம் திகதிகளில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்படும் என நம்புவதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வர்த்தக சபை ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் பேசிய அவர், உயர் நீதிமன்றம் பரிந்துரைக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் மாற்றங்களை மேற் கொள்ளும் எனத் தெரிவித்தார்.

போர்ட் சிட்டி குறித்த ஆரம்ப பணிகள் 2013 இல் தொடங்கிய போது, முன்னாள் பிரதமரும் கடந்த அரசாங்கமும் இந்த திட்டத்தை தொடர்ந்தன என அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக் காட்டினார்.

எனவே இந்தத் திட்டம் இலங்கையின் பொருளாதாரத்தின் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்பதால் எதிர்க்கட்சி தங்களுக்கு ஆதரவளிக்கும்என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் திட்டம் 80 மில்லியன்டொலர் மேலதிகமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுவரும் என்றும் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** பலாலி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அக்கரை, வளலாய், வாதரவத்தை, பெரிய பொக்கணை, ஐஸ் தொழிற்சாலை, பொலிகண்டி, அண்ணா சிலையடி, பாரதிவீதி கம்பர்மலை, இலந்தைக் காடு, கல்லுவம், கணபதி ஆலை கொற்றாவத்தை, கெருடாவில் கொற்றாவத்தை, மயிலியதனை, நாச்சிமார் கோவிலடி பொலிகண்டி நவிண்டில்- உடுப்பிட்டி வதிரி வீதி, நெடியகாடு, பழைய பொலிஸ் நிலையம் வல்வெட்டித்துறை, பொக்கணை, பொலிகண்டி, புறாப்பொறுக்கி, சந்நிதி கோவில், சிதம்பரா கல்லூரி, தொண்டைமானாறு, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை சந்தி, உடுப்பிட்டி நூலகம், வல்லை, வல்வெட்டித்துறை- சிவன் கோவில் வீதி, வல்வெட்டித்துறை வன்னிச்சி, வல்வெட்டித்துறை வீதி கல்லறைக்கு அருகில் உடுப்பிட்டி, வெள்ளைவீதி உடுப்பிட்டிச் சந்தி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வன்னிவைரம் பொன்னகர், பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சி.இ.சி. கல் உடைக்கும்ஆலை, அளுத்வத்த போகஸ்வெவ, போகஸ்வெவ, மாமடுவ கிராமம் மகாகச்சக் கொடிய, மகாகச்சக்கொடிய, மல்மடுவ (மகாகச்சக் கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன் மடு, சலலிங்கம, தரணிக்குளம் ரோட் மண்ட எலக்ட்ரோ எலக்ட்ரிக்கல், குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், மணியர்குளம் (வீட்டுத் திட்டம்) நித்திய நகர், ராங்கீத்கம, சங்கராபுரம், வாரிக்குடியூர் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஒல்லிமோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (நி-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தெய்வத்தன்மையை இழக்காதீர்

❖ தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதை விழிப்படையச் செய்து எழுந்திருக்கச் செய்யுங்கள்.

❖ ஒவ்வொரு கடமையும் புனிதமானது தான். கடமையில் பக்தியுடன் இருப்பது தெய்வ வழிபாட்டில் மிக உயர்ந்த முறையாகும்.

❖ நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, பிறர் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கு உதவி செய்வதே.

❖ இன்னல்கள் அனைத்துக்கும் நடுவிலும், நமது தெய்வத்தன்மையை இழக்காமல் இருக்க வேண்டும்.

❖ கோயிலாலோ, விக்ரகத்தின் அழகாலோ இறைவன் மகிமை பெற்றான் என்பதில்லை. கடவுளால் தான் அவற்றுக்குப் பெருமை.

❖ பணத்திற்காக, உடல்நலத்திற்காக, சொர்க்கத்திற்காக, ஞானத்திற்காக அல்லாமல் மன சுத்தத்துக்காக பிரார்த்தனை செய்யுங்கள். பிற பிரார்த்தனைகள் அனைத்தும் சுயநலம் தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசியமற்ற பயணங்களைத் தவிருங்கள்

# வெளியில் செல்வதானால் இரு மாஸ்க் அணியுங்கள்

**(கொழும்பு)**

**அத்தியாவசியமற்ற பயணங்களை அதிகளவு தவிர்த்துக் கொண்டால் அடுத்த நான்கு வாரங்களில், தொற்று நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று தொற்று நோய் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.**



தற்போதைய கொரோனா நிலவரம் தொடர்பில் தகவல் வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன் போது தொடர்ந்தும் பேசிய அவர்,

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலான சூழ்நிலை நாட்டில் தொடர்ந்து நிலவி வருகின்றமையினால், ஒருவர் குறைந்தது இரண்டு முகக்கவசங்களை அணிந்து, வீட்டை விட்டு வெளியேறுவதனை வழக்கமாகக் கொண்டு வாருங்கள்.

அத்தியாவசியமற்ற பயணங்களையும் அதிகளவு தவிர்த்துக்கொண்டால் அடுத்த நான்கு வாரங்களில், தொற்றுநோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

கம்பஹா, களுத்துறை, கொழும்பு, கண்டி, குருநாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

ஆகவே இந்த மாவட்டங்களுக்கே தடுப்பூசி போடுவதற்கு முதலில் முன்னுரிமை அளிக்க தீர்மானித்துள்ளோம். அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றினை தடுப்பதற்கு ஒரே தீர்வு தடுப்பூசியாகும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## சுகாதார வழிகாட்டல்களை மீறுவோரை தூக்கி ஏற்ற வேண்டாம்

### பொலிஸாருக்கு அறிவுறுத்தல்




(கொழும்பு)

சுகாதார சட்டத்தை மீறுபவர்களைத் தூக்கி ஏற்ற வேண்டாம் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாரசிங்க பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மூன்றாவது அலை மிகவும் உக்கிரம் அடைந்து வரும் நிலையில் சுகாதார நடைமுறைகளைப் பேணாதவர்களை கைது செய்து தனிமைப்படுத்தல் சடத்தின் மூலம் தனிமைப்படுத்துமாறு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நாடு தழுவிய விசேட பாதுகாப்பு நடவடிக்கையின் அடிப்படையில், மட்டக்களப்பு நகர்ப்பகுதியிலும் முன்னெடுக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பொலிஸ் குழு என்ற ரீதியில் முன்னெடுக்கும் கொரோனா சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல், முகக்கவசம் அணியாமல் வருபவர்களை கைது செய்வதற்கான முழு அதிகாரம் பொலிஸிற்கு இருக்கின்றது.

ஆனாலும் பொலிஸாரான உங்களையும் பாதுகாத்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் வரும் நபர்களை கைது செய்யும் போது அவர்களையும் பாதுகாக்க வேண்டும். அதற்காக அவர்களைத் தூக்கி வாகனங்களில் ஏற்ற வேண்டாம்.

சுகாதார சட்டத்தை மதிப்பவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அது பொலிஸாரின் கடமை. அதேபோன்று சுகாதார சட்டத்தை உதாசீனம் செய்பவர்களைக் கைது செய்ய முடியும்.

அவ்வாறு கைது செய்தவர்களை அவர்கள் செய்த தவறு எது என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்டி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அவர்களை கைது செய்து தனிமைப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## இலங்கை பணிப்பெண் குவைத்தில் கழுத்தறுத்துக் கொலை

(கொழும்பு)

குவைத் இராட்சியத்தில் பணி புரிந்து வந்த இலங்கை வீட்டுப் பணிப்பெண் ஒருவர் எதியோப்பிய நாட்டைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் ஒருவரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட இலங்கைப் பெண் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானம்ஒன்றில்கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் இந்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட தாக அவர் மேலும் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி குறித்த இலங்கைப் பணிப் பெண் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## ஒரு வாரம் முடக்கம்; ஆராய்கிறது அரசு

(கொழும்பு)

கொவிட் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், ஒரு வார காலத்திற்கு முழுமையாக நாட்டை முடக்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக உயர்மட்ட தகவல்கள் மூலம் அறிய முடிந்ததாக ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போதே, நாட்டை முடக்குவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின் போது, அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உயர்மட்ட அரச அதிகாரிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, நாட்டை ஒரு வார காலப்பகுதிக்கு முழுமையாக அல்லது 75 வீதம் முடக்குவதற்குத் தயாராகும் பட்சத்தில் அதற்குத் தேவையான தயார்படுத்தல்களை முன்னெடுப்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## ஐக்கிய அரபு இராச்சியத்திற்குள் இலங்கையர்கள் நுழைவதற்கு தடை!

(கொழும்பு)

இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் பயணிகள் நாட்டுக்குள் நுழைவதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் தடைவிதித்துள்ளது.

கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நாளை புதன்கிழமை முதல் இந்த தடை அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## விசேட சோதனைகள் தொடர்ந்து முன்னெடுப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் கொவிட்-19 தொற்றினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விதிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிகளை, பொதுப் போக்குவரத்தின்போது மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, பேருந்து, டக்ஸி மற்றும் முச்சக்கரவண்டி என்பவற்றை பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார விதிகள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விதிகளை மீறுபவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக விசேட பொலிஸ் சோதனை நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக அவர் நேற்று தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

கொரோனா தொற்று உறுதியான நிலையில் நகர சபை முடக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியான பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளில் நகர சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கையாக நகர சபை முடக்கப்பட்டுள்ளதுடன் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. பரிசோதனைகளின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ம-3)

## 14 பொலிஸாரு...

கடந்த இரு நாட்களுக்கு முன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் 22 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் தொற்றுக்குள்ளான பொலிஸாருடன் நெருக்கமான தொடர்பிலிருந்த பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன.

இதன்போதே புதிதாக 14 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தினைச் சேர்ந்த கொரோனாத் தொற்றுக்குள்ளான பொலிஸாரின் மொத்த எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,100,316)

## யாழ்.மாவட்டச்...

சோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதனால் மாவட்டச் செயலகத்தின் நிர்வாகக் கிளை மற்றும் ஸ்தாபனக் கிளை ஆகிய பகுதிகள் முழுமையாக இழுத்து மூடப்பட்டு அங்கே பணியாற்றும் சகல பணியாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் 450க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றபோதும் நேற்று சுமார் 100 பேர் மட்டுமே பணிக்கு சமுகமளித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நெல்லியடியில்...

தொற்று ஏற்பட்ட நிலையில் வெதுப்பகம் சுகாதாரப் பகுதியினரால் நேற்று திங்கட்கிழமை சீல் வைத்து மூடப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் நெல்லியடி நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று திங்கட்கிழமை மாலை கிடைக்கப் பெற்றது.

இம் முடிவின் பிரகாரம் நெல்லியடியில் உள்ள வெதுப்பக நிலையத்தில் பணிபுரிபவருக்கு கொரோ்னா தொற்று ஏற்பட்டமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அங்கு பணிபுரியும் சிலர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதுடன் வெதுப்பகம் சுகாதாரப் பகுதியினரால் சீல் வைத்து மூடப்பட்டது. (ம-3,60,90)

## பிறந்தநாள்...

திங்கட்கிழமை கைது செய்துள்ளதுடன் ஒலிபெருக்கி சாதனங்கள் பலவற்றையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை கரவெட்டி சுகாதார பிரிவில் உள்ள வடமராட்சி துன்னாலை குடவத்தை பகுதியில் நடைபெற்றது.

குறித்த பகுதியில் சுகாதார பரிசோதகர்கள் அனுமதியின்றி பிறந்தநாள் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளதாக கரவெட்டி சுகாதார பிரிவினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டபோது பிறந்தநாளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனால் பிறந்த நாள் நிகழ்வை ஏற்பாடு செய்த பெண் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளதுடன் ஒலி பெருக்கி சாதனங்களையும் பறிமுதல் செய்துள்ளனர். (ம-3,90)

## மாணவர்கள்...

ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு தொற்று ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த வகுப்பில் உள்ள மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டட பிசிஆர் முடிவுகளும் நேற்று வெளிவந்த நிலையில் அதில் ஆறு மாணவர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,316)

## யாழில் இயங்...

விடுதியினை கொரோனா தொற்று நோயாளர்களுக்குரிய சிகிச்சை வழங்கும் நிலையமாக மாற்றப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வ[illegible] தெரிவித்துள்ளார்.

தற்போது [illegible] அதிகரித்து வருவதனால் அவர்களுக்கான சிகிச்சை வழங்கும் நிலையங்கள் இட வசதிகள் போதாமல் உள்ளது.

இதனால் ஆதார வைத்தியசாலைகளில் ஒரு விடுதியை இதற்கான சிகிச்சை நிலையமாக மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் இயங்கும் ஆதார வைத்தியசாலைகளான பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை போன்ற ஆதார வைத்தியசாலைகளில் ஒரு விடுதியினை கோவிட் - 19 நோயாளர் சிகிச்சை நிலையமாக மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-3,30,90)

## கொரோனா விதி...

வத்தினரின் பிரசன்னத்துடன் பௌத்த பிக்குகள் இணைந்து தொல்லி யல் திணைக்களத்தினரால் பிரித் ஓதும் பௌத்த வழிபாட்டு நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

குருந்தாவ அசோக புராதன பௌத்த விகாரை சிதைவுகள் இருப்பதாக தெரிவித்து அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்று இரவிரவாக பூசைகள் இடம்பெற்றது.

பௌத்த விகாரையை புனர்நிர்மாணம் செய்யும் வேலைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் ஜெகத் சுமதிபால தெற்கிலிருந்து வருகைதந்து கலந்து கொள்ளவுள்ளதாகவும் அறிய முடிகின்றது. (ம-3,281)

## மாகா...

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லிரத்நாயக்க இதனை அறிவித்துள்ளார்.

கோவிட்-19 பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் ஒன்று கூடும் அனைத்து கூட்டங்களையும் ரத்து செய்யவும் வர்த்தக நிலையங்களுக்குள் பிரவேசித்தல், தங்கியிருக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தப்படுத்தவும் ஜனாதிபதி பணித்துள்ளார். (ம-3)

## +2,5...

கோவிட் கொத்தணி உடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் 128,479 பேருக்குகொரோனா தொற்று உறுதிப் [illegible] (ம-3)

## தொடர்ந்து...

எடுக்கவில்லை.

எனினும் கோவிட் குழுவின் முடிவுக்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

விமான நிலையங்களை மூடுவதற்கு இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. எனினும் கோவிட் குழுவின் முடிவுக்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (ம-3)

## 36 பேருக்கு...

கூறியுள்ளார்.

இதன்படி யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (அவர்களில் 4 பேருக்கு எழுமாற்று பரிசோதனையில் தொற்று உறுதியாகியுள்ளது)

பண்டத்தரிப்பு ஆயுள்வேத வைத்திய சாலை பணியாளர்கள் 3 பேர் உட்பட 5 பேருக்கும் கரவெட்டி சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் இருவருக்கும் மேலும் பருத்தித்துறை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற சென்றிருந்த ஒருவருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 4 பேருக்கும், யாழ்.சிறைச் சாலையில் இருவருக்குமாக மாவட்டத்தில் 36 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் சென்றவர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும்,

நேற்று 778 பேருடைய பிசிஆர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதாகவும் பணிப்பாளர் கூறியுள்ளார். (ம-3,18,33,316)

தன நிதானய
திகதி - 2021.05.10
சீட்டிழுப்பு இலக்கம் - 514
N 01 06 27 80
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 10.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2772
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 12 31 43 78
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/05/10
சீட்டிழுப்பு இலக்கம் 4477
Q 8 8 2 8 1 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0833
R 20 09 24 47 52

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1679 திகதி 2021.05.10
ஆங்கில எழுத்து 0
வெற்றி இலக்கங்கள் 22 24 48 86
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1273
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 10.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,529,943
வெற்றி இலக்கங்கள் 16 30 32 62 ஆங்கில எழுத்து V
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3603
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 10.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,519,172
வெற்றி இலக்கங்கள் 08 12 47 50 ஆங்கில எழுத்து E
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராஜ
சுப்பர் ஜக்பொட் 23,16,577/=
திகதி: 10.05.2021
வெற்றி வாரம்: 3154
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 03 06 22 30
மீனம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,843,360

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1447 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 10/05/2021 | தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் P 03 13 58 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் 55,646,852/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1756
சீட்டிழுப்பு திகதி 10.05.2021
வெற்றி இலக்கங்கள் 07 38 63 70 ஆங்கில எழுத்து Z
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 25,155,512
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ONLINE SEMINAR
தமிழ் மொழியிலான கலந்துரையாடல்
STUDY MEDICINE IN CHINA
on 15th MAY 2021
at 10.00am
மேலதிக தொடர்புகளுக்கு
Dr. தேவா
Mob : 076 764 6888 Tel : 011 588 2896
Authorised agent in Sri Lanka
BYF EDUCATION (PVT) LTD
2C, 1/2, Charles Place, Dehiwala, Sri Lanka
www.byfedulk.com
(6847)

காணி விற்பனை
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட
( யாழ். நகரில் இருந்து 11/2 Km தூரம் )
ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி,
முதலாம் ஒழுங்கையில்
33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம்.
077 468 3354
077 288 0152
074 075 4204
(6866)

### தீவிரமடைந்து வரும் கொரோனா

# 2 வாரங்களுக்காவது நாட்டை முடக்குங்கள்

## ஆனந்த தேரர் கோரிக்கை

(கொழும்பு)

தீவிரமடைந்துவரும் கொரோனாத் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் 2 வாரங்களுக்கு நாட்டை முடக்கும்படி கோட்டாபய - மஹிந்த தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர பெரிதும் பாடுபட்ட முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்னும் 24 மணிநேரத்தில் அரசாங்கம் தீர்மானமொன்றை எடுக்காது விட்டால் இலங்கையும் எதிர்காலத்தில் இந்தியாவைப் போன்று மாறிவிடும் என எச்சரித்தார்.

கொழும்பு - நாரஹேன்பிட்டி அபயராமய விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்,

குறைந்த பட்சம் 02 வாரங்களுக்காவது நாட்டை முடக்கம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம். இதுவரை நாங்கள் இப்படியான கோரிக்கையை விடுத்திருக்கவில்லை.

ஆனாலும் தற்சமயம் நாட்டின் பயணமானது ஆபத்தை நோக்கிச் செல்கின்றது.

கொழும்பு மாத்திரமல்ல, பருத்தித்துறை முதல் மாத்தறை வரையிலான எல்லாப் பகுதிகளிலும் இன்று கொரோனா தொற்று பரவிவிட்டது. விரைந்து நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தானாகவே இந்த நாடு ஸ்தம்பித்துவிடும்.

இன்று அரச மருத்துவமனைகளில் தாதியர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன் 200இற்கும் மேற்பட்ட தாதியர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்க மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனிடையே இராணுவம் உட்பட அரசாங்கம் 10 ஆயிரம் நோயாளர் கட்டில்களை அமைக்கின்றது. அதனை ஒருபக்கம் வரவேற்றாலும் இன்று பயிற்சிபெற்ற தாதியர்களின் தட்டுப்பாடு இருப்பதால் புதிய சிகிச்சைப் பிரிவுகள் இருந்தும் பணியாட்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே ஓய்வுபெற்ற தாதியர்களையாவது மீண்டும் குறுகிய நாட்களுக்கு சேவையில் அமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றில் நடத்தப்பட்ட ஆய்வில், இந்த நிலைமை தொடர்ந்தால் இலங்கையில் தினமும் 20 ஆயிரம் கொரோனா நோயாளர்கள் இனங்காணப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அந்த நிலைமைக்கு நாட்டை இட்டுச் செல்லாமல் அரசாங்கம் விரைந்து இன்னும் 24 மணிநேரத்தில் தீர்மானமொன்றை அறிவிக்க வேண்டும் என்றார். (ம-03)

PERSONAL & GROUP CLASSES
LOGIC
S.S.மனோகரன்
இராஜ வீதி, திருநெல்வேலி
(விவாகப் பதிவாளர் காரியாலயம் முன்பாக.)
(6844)

இரண்டாம் ஆண்டு நினைவில்
எம் குலவிளக்கு
அமரர்
செல்லத்துரை பரமானந்தம்
( வீடியோ ஆனந்த் ஸ்ருடியோ - மானிப்பாய் )



11.05.2019 அன்று இறைபதமடைந்த
எம் தந்தையின்
இரண்டாம் ஆண்டு நினைவுகளை சுமந்து...
அன்பின் இலக்கணமாய் அறிவின் விருட்சமான தந்தையே
பற்றும் பாசமும் மீதுரப் பெற்று வாழ்ந்தீர்
ஆறுதல் பல கூறி அரவணைத்த அப்பா
ஈராண்டு கடந்தது என்று நினைக்கையில்
ஈர விழி காயவில்லை நினைவுகள் மறையவில்லை...

பண்பானவராய் மானியம்பதி மட்டுமன்றி பல பிரதேசம்
வண்ணமாய் புகைப்பட கலைஞனாய் வலம் வந்தீர்
புன் சிரிப்பும் நேரிய பேச்சும் ஒன்றிணைந்த போக்கும்
மழலைகள் போலிருந்தீர், அறிவுரைகள் பல கூறி வளர்த்தீர்
"டாடி" என அழைத்திட முத்தமிட்ட தந்தையே...

எம்மை விட்டு நீங்கள் பிரிந்து போனாலும்
நித்தம் நித்தம் நடமாடும் தன்மையை காண்கிறோம்
கண்ணை இமை காப்பது போல காத்தீர்களே
காலனும் வந்துமை கடத்தி ஈராண்டுகள் கடந்ததுவோ
காலங்கள் கடந்தாலும் எம் இதயங்கள் கனக்கின்றது...

குடும்பம் நலம் வாழ உழைத்திட்ட நாயகன்
சமூகத்திற்கு ஆற்றிய பணியும், அன்பு மனைவியும்
பிள்ளைகளும் பரிதவிக்க சிவபதம் பெற்றீரப்பா
மானிடனாய் மலர்ந்த நாளிலிருந்து மாண்புடன் வாழ்ந்தீர்
"ஆனந்தன்" எனும் நாமம் சிவப்பொருளில் பரமானந்தம் பெற்றதப்பா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
நினைவுகளுடன்
குடும்பத்தினர்
(6363)

உடனடி வேலை வாய்ப்புக்கள்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் வவுனியா
வயதெல்லை : 18 - 30
கல்வித் தகைமை : G.C.E O/L அல்லது G.C.E A/L கற்றிருத்தல்.
வருமானம் : 18000 - 45000



திறமையானவர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவர்.
நேர்முகத் தேர்வு உங்கள் பிரதேசத்திலேயே நடைபெறும்.
முற்பதிவுகளுக்காக இன்றே உங்களது
முழுப் பெயர், முகவரி, தே.அ.அ.இல.
என்பவற்றை SMS மூலமாகவோ Viber, Whatsapp மூலமாகவோ எமக்கு அனுப்பி வையுங்கள்.
Inner Circle
Call/Whatsapp/Viber: 076 770 7759
(6867)

VACANCY
க.பொ.த உ/தரத்தின் பின்னரான உங்களது எதிர்காலம் குறித்து சிந்திப்பவரா? உங்கள் எதிர்கால கனவுகளை நனவாக்கிட இன்றே எம்முடன் இணையுங்கள்.
இலங்கையின் முன்னணி நிறுவனத்தின் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள்.
நிதி ஆலோசகர்
அலுவலக உதவியாளர்
முகாமையாளர்
தொடர்புகளுக்கு
076 152 6581
(6862)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
0768226240 DHL
(C-2133)

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு
மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
(C-2134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.